பக்கங்கள்: 19

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 12 வியாழக்கிழமை 26.01.2023 கதிர் 79

**இனி அது ரகசியம் அல்ல!**

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் நடந்த மாவீரர் தின உரை ஒன்றில் ரணில் விக்கிரமசிங்கவை ஒரு குள்ளநரி என்று பகிரங்கமாக விமர்ச்சித்திருப்பார். ரணிலின் மாமனாரான ஜே.ஆர்.

☞ 2

# அரசமைப்புப் பேரவையில் தேர்தல் ஆணைக்குழுவை மாற்றுவது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை

## கூட்டத்தில் பங்கேற்ற எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



தற்போதுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை மாற்றுவது தொடர்பில் அரசமைப்புப் பேரவையின் கூட்டத்தில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின் போது சில தொழிநுட்ப பிரச்சினைகளால் வேலை இழந்த நானூறுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (26) சந்தித்தனர். இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் செயற்பாடுகள் அரசமைப்புப் பேரவையின் ஊடாக இடம்பெறுகின்றன. இதன் மூலம் நிறைவேற்றுத் துறை, நீதித்துறை மற்றும் சட்டமன்றம் போன்றனவற்றை சமநிலைப்படுத்தும் வகையில்

☞ 2

# 13ஐ ஒழிக்கவேண்டும் அல்லது நடைமுறைப்படுத்தவேண்டும்

## நான் அதைச் செய்வேன் என்கிறார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜன. 27

அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் அல்லது அதனை இல்லாது ஒழிக்க வேண்டும். அதனை நடைமுறைப்படுத்த முடியாது என்றால் அதனை நீக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரால் நேற்றுக் கூட்டப்பட்ட சர்வகட்சிக் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையின்போது இதனைத் தெரிவித்தார்.

☞ 2

## ரியூனியன் தீவிலிருந்து 38 பேரை நாடு கடத்தல்

### சி.ஐ.டியால் கைது செய்யப்பட்டு விசாரணை

கடல் வழியாக சட்டபூர்வ ஆவணங்கள் இன்றி மீன்பிடிப் படகு மூலம் ரியூனியன்தீவிற்குச் சென்ற சமயம் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 38 பேர் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி கைது செய்யப்பட்ட

☞ 2

## வாக்குறுதியளிக்கப்பட்ட எதுவும் நிறைவேற்றப்படவேயில்லை

### சர்வகட்சிக் கூட்டத்தில் தமிழ்த் தரப்பு எடுத்துரைப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன.27

சர்வ கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்ட எந்த எந்தவொரு விடயமும் நிறைவேற்றவில்லை என நேற்று நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டத்தில் நாடாளுமன்ற

☞ 2

## சூட்டுக் காயத்துடன் மிருசுவிலில் சடலம்

### கட்டுத்துவக்கு வெடித்திருக்கலாம் எனச் சந்தேகம்

தென்மராட்சி, ஜன. 27

மிருசுவில் வடக்கு வயல்கரை பகுதியில் இருந்து துப்பாக்கிச் சூட்டுக் காயத்தை ஒத்த காயத்துடன் உயிரிழந்து கிடந்த ஒருவரின்

☞ 2

## சுதந்திரதினத்தை ஏன் கொண்டாட வேண்டும்? ஜனாதிபதி கொடுத்த விசித்திரமான விளக்கம்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கொண்டாடுவதற்கு அரசு பெரும்தொகைப் பணத்தைச் செலவிட்டு வருவது குறித்து மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கும் நிலையில் கொண்டாட்டம் ஏன் அவசியம் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க.



☞ 2

## கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் நெடுந்தீவில் மூவர் படகில் கைது

நெடுந்தீவில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மூவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். படகில் கஞ்சா கடத்தினார்கள் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவர்களிடம் இருந்து 49 கிலோ கஞ்சா மீட்கப்பட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த 25 ஆம் திகதி அதிகாலை வேளையில் நெடுந்தீவு தெற்கு கடற்பரப்பில் படகில் சென்றுகொண்டிருந்த சமயம் இந்த மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இலங்கை கடற்படையினர் படகை மறித்து சோதனையிட்டசமயம் அதில் 49 கிலோ 906 கிராமும் நிறையுடைய கஞ்சாவைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மூவரும் மருதங்கேனி மற்றும்

☞ 5

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையை நிறுத்த வேண்டும்

### 6 தமிழ் அமைப்புக்கள் அமெ.செனட்டிடம் வலியுறுத்து

அமெரிக்கா இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்த வேண்டும் தமது சுதந்திரம் குறித்து தமிழ் மக்களிடம் வாக்கெடுப்பை நடத்தவேண்டும் என அமெரிக்காவை சேர்ந்த ஆறு தமிழர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளன.

அமெரிக்க நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் தமிழர் அமைப்புகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

போரின் இறுதி கட்டத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 146,679 ஆக இருக்கலாம் என தெரிவித்துள்ள

☞ 5

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயவர்த்தனவுக்கும் அரசியல் விமர்சகர்கள் மத்தியில் அந்தப் பெயர் உண்டு.

இப்போது ஏன் இந்தப் பழைய கதைகள் எல்லாம் என்கிறீர்களா? விடயம் இருக்கின்றது. அதைத்தான் இன்றைக்கு உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

ஜனாதிபதி நேற்று சர்வகட்சிக கூட்டத்தைக் கூட்டியிருந்தார். ஏற்கனவே கூட்டப்பட்ட கூட்டங்களில் சொல்லப்பட்ட விடயங்கள் நடைமுறைப்படுதப்படவில்லை என்கிற குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டுவரும் நிலையிலும் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்திருந்த சமயம் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டுப் போயிருந்த நிலையிலும் இந்தக் கூட்டத்தை எல்லோரும் இல்லாவிட்டாலும் நான் ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தேன்.

கூட்டம் தொடங்கியதும் ரணில் உரையாற்றினார். எடுத்த எடுப்பிலேயே 13ஆவது திருத்தத்திற்குள் பாய்ந்தார். எனக்கு முழு நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது என்கிற பீடிகையோடு தொடங்கினார். அதைப் பயன்படுத்தி ஏதோ 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் என்று அறிவிக்கப்போகிறாராக்கும் என்று எதிர்பார்த்தால் பாவம் நீங்கள் ஏமாந்துபோவீர்கள். அவர் அந்த வசனத்தைச் சொன்னார் தான்.

ஆனால், இருந்தால்தான் நடைமுறைப்படுத்துவேன் இல்லாமல் செய்துவிட்டீர்கள் என்றால் பிரச்சினை இல்லை என்கிற வகையில் இனவாதிகளுக்கு ஒரு கயிரையும் சேர்த்தே தூக்கி கொடுத்தார். யாராவது தனிநபர் பிரேரணையாக என்றாலும் கொண்டுவந்து 13ஐ நீக்க முயற்சிக்கலாம் என்று யோசனையும் எடுத்துகொடுத்தார். ஆனால், அதைத் தான்தான் தூண்டிவிட்டேன் என்று பழி வந்துவிடக்கூடாது என்பதற்காக அந்தப் பிரேரணைக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் அதற்குத் தான் பொறுப்பல்ல என்றார்.

இது முடிந்தாயிற்றா, காணி பொலிஸ் அதிகாரங்கள் குறித்த விடயத்துக்கு வந்தார். காணி ஆணைக்குழுவை நியமிப்பதற்கான சட்ட வரைவை மார்ச் மாதமளவில் நாடாளுமன்றத்தில் முன்வைக்கலாம் என்றார். 13ஆவது திருத்தத்தின் கிழ் காணி ஆணைக்குழு உருவாக்கப்படவேண்டும். இந்த ஆணைக்குழுவிற்கு 9 பேர் மாகாண மட்டத்திலும் ஏனைய 12 பேரை ஜனாதிபதிசார்பாகவும் நியமிக்கலாம் என்பது தனது யோசனை என்றார்.

அடுத்ததாக தேசிய காணிக் கொள்கை ஒன்று அறிமுகம் செய்யப்படும் என்றும் காணி ஆணைக்குழுவால் தேசிய காணிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். நாட்டின் 30 சதவீதம் வனங்களாக இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு பொதுக் கொள்கை உருவாக்கப்படவேண்டும் என்றும் அவசர அவசரமாக காணிகள் வனங்களாக உள்வாங்கப்பட்டுள்ளன என்றும் ஆறுகள் உற்பத்தியாகும் இடங்களில் வனங்களை உருவாக்கத்தக்கதாகவும் 30 சதவீத காடுகள் கொள்கையைப் பேணத்தக்கதாகவும் காணிக்கொள்கையை உருவாக்கிக்கொள்ளலாம் என்றார்.

காணி தொடர்பான அனைத்து உரிமைகளும் மாகாணங்களுக்கு வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டு வருகின்றது. அதிகாரப் பகிர்வின் மிக அடிப்படைகளில் ஒன்று காணிக் கொள்கை. பாடசாலைக் கல்வி அதிகாரத்தை மாகாணங்களுக்குக் கொடுத்துவிட்டு தேசிய பாடசாலைகள் என்று உருவாக்கி அவற்றை பின்கதவால் பறித்துகொள்வதுபோன்ற ஒரு திட்டம் மாதிரி இருக்கிறது இந்த காணிக் கொள்கையும் அந்தக் கதையாக முடியாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

மாகாண பொலிஸ் அதிகாரங்கள் குறித்தும் அங்கு பேசினார் ரணில். லண்டன் மாநகரத்துக்கு இருக்கும் இருக்கும் அதிகாரங்கள்கூட இங்கு மாகாணங்களுக்கு வழங்கப்படவில்லை என்று ஜென்டில்மேனாக முதலில் கருத்துச் சொன்னவர், மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரம் என்று வருகின்றபோது மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களுக்குப் பதிலாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஒன்றை உருவாக்கலாம், அதற்கான சட்டத் திருத்தத்தை கொண்டு வரலாம் என்றாரே பார்க்கலாம். மாகாண பொலிஸ் ஆணைக்குழு என்பதே வெறும் கண்துடைப்பு என்று தமிழர்கள் கூறிக்கொண்டிருக்க அதையும் இல்லாமல் செய்துவிடலாம் என்று யோசனையையும் எடுத்து கொடுத்திருக்கிறார் ரணில்.

தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தப்போகின்றேன் என்கிற விதத்தில் தொடங்கி எங்குகொண்டு வந்து முடித்தார் என்று பார்த்தீர்களா.

இப்போது சொல்லுங்கள் நான் தொடங்கும்போது அன்ரன் பாலசிங்கத்தின் வரிகளை நினைவூட்டியதில் ஏதும் தவறு இருக்கிறதா என்று.

**- இடிமின்னல் -**

## அரசமைப்புப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்புப் பேரவை செயற்படுகின்றது. அரசமைப்புப் பேரவைக்குப் பல பொறுப்புக்கள் இருக்கின்றன.

நேற்று (நேற்றுமுன்தினம்) கூடிய அரசமைப்புப் பேரவையில் தேர்தல்கள் ஆணைக்குழுதவிர்ந்த ஏனைய ஆணைக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்களைக் கோருவதாக முடிவு செய்யப்பட்டன.

தேர்தல் நடக்கும் போது தற்போதுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. அதை மாற்றவே முடியாது. தற்போதுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளவாறே செயற்பட வேண்டும்.

எவ்வாறாயினும், மக்களின் இறையான்மைக்கு எதிராகச் செயற்படுவது பாரதூரமான குற்றமாகும். இது சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடிய பாரிய குற்றமாகும் – என்றார்.

## ரியூனியன் தீவிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் அனைவரும் விமானம் மூலம் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டனர் என்று அதிகாரிகள் கூறினர். கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களைத் தமது காவலில் எடுத்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நீர்கொழும்பு துறைமுகத்திலிருந்து 5 பேருடன் புறப்பட்ட இந்தப் படகில் பின்னர் 64 பேர் ஏற்றப்பட்டுள்ளனர் பத்தலகுண்டு, புத்தளம் ஆகிய இடங்களில் இருந்து சிறிய படகுகளில் அழைத்து வரப்பட்டு இவர்கள் படகில் ஏற்றப்பட்டனர் என்று கடற்படை அதிகாரிகள் கூறுகின்றனர். படகு பிரான்ஸ் நாட்டின் டியேகார்சியா தீவை நோக்கி புறப்பட்டுள்ளது,

இவர்களை 30ஆம் திகதி பிரிட்டனின் கடற்படையினர் கடலில் வழிமறித்து திருப்பி அனுப்பியுள்ளனர். பின்னர் படகு ரியூனியன் தீவுக்கு சென்றுள்ளது. ஜனவரி 14ஆம் திகதி அங்கு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டவர்களில் 38 பேர் 25ஆம் திகதி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் கடற்படையினர் தெரிவித்தனர்.

திருப்பி அனுப்பப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், நீர்கொழும்பு, கம்பகா ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அதிகாரிகள் கூறினர்.

இவர்கள் ஒவ்வொருவரும் ஆள்கடத்தல் காரர்களுக்குத் தலா ரூ. 10 லட்சம் முதல் ரூ. 40 லட்சம் வரை பணம் கொடுத்தே இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்த மாத முற்பகுதியிலும் ரியூனியன் தீவிற்குப் படகு மூலம் சென்று சேர்ந்த 45 இலங்கையர்களை பிரான்ஸ் நாட்டு அதிகாரிகள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பியிருந்தனர்.

## சூட்டுக் காயத்துடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலத்தை மீட்ட பொலிஸார் அது தொடர்பில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மிருசுவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த 34 வயதான மோகனதாஸ் என்பவரது சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வயல்கரை பகுதி ஊடாக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் கட்டுத்துவக்கு வெடித்து இவர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று பொலிஸார் கருதுகின்றனர். கொடிகாமம் பொலிஸார் அது தொடர்பில் விசாரித்து வருகின்றனர்.

இந்தப் பகுதியில் காட்டுப் பன்றிகளை இலக்குவைத்து கட்டுத்துவக்குள் சட்டவிரோதமாகப் பொருத்தப்படும் வழக்கம் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சுதந்திரதினத்தை ஏன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திர தினத்தைகூடக் கொண்டாட முடியாதவர்கள் இவர்கள் என்று ஏனைய நாடுகள் இலங்கையை நினைத்து விடக்கூடாது என்பதால் அதனைக் கொண்டாட வேண்டியிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

“75ஆவது சுதந்திர தினத்தை நாம் கட்டாயம் கொண்டாடவேண்டும். இல்லையென்றால் சுதந்திர தினத் தைக்கூட கொண்டாட முடியாதவர்கள் என்று உலகம் எம்மைப் பார்த்துக் கூறும். அதேபோன்று சுற்றுலாவிகளையும் முதலீட்டாளர்களையும் நாம் கவர்ந்திழுக்கவேண்டும். எமது நாடு குறித்த சாதகமான விம்பத்தை நாம் கட்டியெழுப்பவேண்டும். அதனால் செலவுகளைக் குறைத்துக்கொண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டும்” – என்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சுதந்திர தின கொண்டாட்டங்கள் தொடர்பான கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சுதந்திர தினத்தையொட்டி பெப்ரவரி 2ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை சிறப்பு நிகழ்வுகள் பல ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தலதா மாளிகையில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் பிரித் ஓதும் நிகழ்வுகள், ஏனைய மத வழிபாட்டிடங்களில் சிறப்பு வழிபாடுகள், சுதந்திர சதுக்கத்தில் பண்பாட்டு நிகழ்வுகள், காலி முகத் திடலில் பாரம்பரியமான அணிவகுப்புகளுடன் கூடிய முதன்மை நிகழ்வுகள் பொதுப் பூங்காக்கள் மற்றும் மிருகக்காட்சிச் சாலைகளை மக்கள் பார்வைக்கு இலவசமாகத் திறந்துவிடல், யாழ்ப்பாணத்தில் இந்தியாவால் அமைக்கப்பட்ட பண்பாட்டு மண்டபத்தைத் திறத்தல், டொந்தர முதல் பருத்தித்துறை வரையான மிதிவண்டிப் பயணம் என்ப திட்டமிடப்பட்டுள்ள முக்கிய நிகழ்வுகளுள் சிலவாகும்.

இந்த அனைத்து நிகழ்வுகளும் திட்டமிட்டபடி நடப்பதை உறுதிப்படுத்துவது அதிகாரிகளின் கடமை என்று தெரிவித்த ஜனாதிபதி, செலவுகள் குறித்து மக்களிடம் அதிருப்தி ஏற்பட்டிருப்பதால் முடிந்த வரையில் இந்த நிகழ்வுகளுக்கான செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

## வாக்குறுதியளிக்கப்பட்ட ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிதார்.

“இதற்கு முன்பு இடம்பெற்ற 4 கூட்டத்திலும் சொன்னதையே ஜனாதிபதி இன்றும் கூறுகின்றார். எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சுதந்திர தினத்துற்கு முன்பு எல்லாம் நிறைவேற்றப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்டது. எதுவும் இடம் பெறவில்லை என்பதுதான் திடமான உண்மை என்பதனை இங்கே பதிவு செய்கின்றேன்” – என்றார் சுமந்திரன்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், அரசமைப்பின் 13ஆம் திருத்தச் சட்டத்தில் இருந்து கொழும்பு அரசால் திரும்பப் பெறப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மாகாணத்திடம் கையளிக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

அதனை ஓர் அறிக்கையாகவும் தயாரித்து எடுத்து வந்திருந்த அவர் அதனை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

## 13ஐ ஒழிக்கவேண்டும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண பொலிஸ் ஆணைக்குழுவிற்குப் பதில் தேசிய பொலிஸ் ஆணைக்

(05ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

‘காலைக்கதிர்’ பத்திரிகையில் கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உதவி ஆசிரியர்
2. பக்க ஒப்புநோக்குநர்
3. பக்கவடிவமைப்பாளர்
4. செய்தியாளர்கள்
5. இத்துறைகளில் பயிற்சி பெற விரும்புவோர்களும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு -077 307 8799

# தேர்தல் செயற்பாடுகளுக்கு சார்ள்ஸின் பதவி விலகல் பாதிப்பை ஏற்படுத்தாது!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் நிமால் புஞ்சிகேவா தெரிவிப்பு

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பதவி விலகியுள்ளமை உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தாது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிகேவ தெரிவித்துள்ளார்.

பி.எஸ்.எம்.சார்ள்ஸின் பதவி விலகல் தொடர்பாக இன்னமும் எங்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர், ஓர் உறுப்பினர் பதவி விலகியமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களில் இராஜினாமா தொடர்பாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் எங்களுக்கு இது வரை எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள நிமால் புஞ்சிகேவ, எங்களுக்கு குறிப்பிட்ட உறுப்பினரோ அல்லது உரிய அதிகாரசபையோ இது தொடர்பில் அறிவிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சார்ள்ஸ் பதவி விலகல் தொடர்பில் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளதுடன் இதன் காரணமாக உள்ளூராட்சி தேர்தல்கள் தாமதமாகலாம் என்ற கருத்தும் உருவாகியுள்ளது.

எனினும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழுவால் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்களுடன் பணியாற்ற முடியும். சார்ள்ஸின் பதவி இராஜினாமா தேர்தல் நடவடிக்கைகளை பாதிக்காது என புஞ்சிகேவ தெரிவித்துள்ளார்.



## தற்போதைய வரி அறவீடு அசாதாரணமானது – ஹர்ஷ!

நியாயமான முறையில் தனிநபர் வருமான வரியை அறவிடுவதற்கான வேலைத்திட்டம் எம்மிடம் இருக்கிறது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நிச்சயம் வரி திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். அவை பொது மக்களின் கழுத்தை நெரிக்கும் வரி திருத்தமாக அமையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அத்தோடு சர்வதேச நாணய நிதியம் கூறும் அனைத்தையும் செயற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்ற போதிலும், இன்று நாம் அதன் நிபந்தனைகளுக்குள் சிறைப்படுத்தப்பட்டுள்ளோம் என்றும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –



தனிநபர் வருமான வரி 36 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. டொலர் தட்டுப்பாட்டைப்போன்றே, திறைசேரியில் ரூபாவிற்கான தட்டுப்பாடும் நிலவுகிறது. இதற்கான தீர்வு என்ன? நிச்சயமாக பணத்தை அச்சிட முடியாது. எமக்கு கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் கடந்த காலங்களை விட தற்போது பணம் அச்சிடும் வீதம் குறைவடைந்துள்ளது.

சீனி வரி குறைப்பின் மூலம் 20 – 25 பில்லியன் ரூபா வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது. அதனை மீளப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனை விடுத்து தனிநபர் வருமான வரியை கண்மூடித்தனமாக அதிகரிப்பது நியாயமற்றது. வருமானத்தை அதிகரிப்பதற்கு வரி அறவிடப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் தற்போதுள்ளதை விட நியாயமான முறையில் வரியை அறவிட முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் நிச்சயம் வரி திருத்தம் மேற்கொள்ளப்படும். அரசாங்கத்தின் வருமானமும் குறைவடையாமல், அதே சந்தர்ப்பத்தில் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் எமது ஆட்சியில் வரி கொள்கை பின்பற்றப்படும். அதே போன்று ஏற்றுமதி பொருளாதாரத்திலும் அதிக அவதானம் செலுத்தப்படும்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துக்கு சொந்தமான நாடு அல்ல. எனவே அவர்கள் கூறும் அனைத்தையும் செயற்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை. நாம் முன்வைக்கும் வேலைத்திட்டத்தை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும். நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற நேரடி பேச்சுகளின் போது நான் இதனைக் கடுமையாக வலியுறுத்தினேன்.

ஆனால் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றோம். இவ்வாறு தொடர்ச்சியாகப் பயணிக்க முடியாது. இதற்கு மாற்று வேலைத்திட்டம் எம்மிடமிருக்கிறது. அதனை நாம் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்திருக்கின்றோம். – என்றார்.

## சாள்ஸின் விலகல் தேர்தலை பாதிக்காது

### மஹிந்த தேசப்பிரியவும் கருத்து



தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ஏதேனும் காரணிகளால் பதவி விலகினால், அந்த பதவி விலகல் தேர்தல் நடவடிக்கைகளுக்கும், ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கும் எவ்விதத்திலும் தாக்கம் செலுத்தாது. ஆணைக்குழு இயல்பாக செயற்பட முடியும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமான மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பதவி விலகும் பட்சத்தில் ஏற்படும் வெற்றிடம் தொடர்பாக அரசமைப்பின் 104 ஆவது உறுப்புரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய அரசமைப்பின் 104(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கியதாகக் காணப்படலாம். 104 (2) (அ) தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆணைக்குழுவின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்க வேண்டும். தலைவர் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளாவிடின் கூட்டத்துக்கு சமுகமளித்த உறுப்பினர்களில் ஒருவர் கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டும்.

2(ஆ) உறுப்புரையின் பிரகாரம் ஆணைக்குழுவின் தீர்மானம், அந்த தீர்மானம் எடுக்கப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு பெரும்பான்மை ஆதரவு வழங்க வேண்டும். ஒரு வேளை ஒரு தீர்மானத்துக்கு சமமான வாக்குகள் வழங்கப்பட்டால் ஆணைக்குழுவின் தலைவர் தீர்மானித்து வாக்களிக்க வேண்டும்.

104(3) ஆம் உப பிரிவுக்கு அமைய ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால் அதனைக் கருத்திற் கொள்ளாமல் செயற்பட ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு, ஆணைக்குழுவின் உறுப்பாண்மையில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்ற காரணத்தால் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் வலுவற்றவை எனக் கருத முடியாது. ஆகவே ஆணைக்குழு இயல்பாக செயற்பட முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.சாள்ர்ஸ் ஆணைக்குழு பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதிக்கு கடந்த புதன்கிழமை இரவு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது.

## வீட்டு முற்றத்தில் காட்டு யானை உயிரிழந்தமை குறித்து விசாரணை

அம்பாறை, ஜன. 27

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இன்ஸ்பெக்டர் ஏற்றம் பிரதேசத்தில் காட்டு யானையொன்று கடந்த புதன்கிழமை உயிரிழந்திருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தது.

அந்தக் காட்டுயானை உட்பட சில யானைகள் அப்பகுதிகளில் நடமாடி திரிந்ததை அவதானித்ததாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் தற்போது வனஜீவராசிகள்



திணைக்கள அதிகாரிகளும் பொத்துவில் பொலிஸாரும் இணைந்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக இந்தப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான யானைகள் வருகை தந்த வண்ணம் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர் டயனாவுக்கு பெப்ரவரி 17 வரை கால அவகாசம்!

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை நீக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய அமைச்சர் டயானா கமகேவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (வியாழக்கிழமை) கால அவகாசம் வழங்கியுள்ளது.

டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் தாக்கல் செய்த மனு சோபித ராஜகருணா மற்றும் தம்மிக கனேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன் நேற்று (வியாழக்கிழமை) விசாரணைக்கு வந்தது.

இந்நிலையில் டயானா கமகே தரப்புக்கு ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க பெப்ரவரி 17 வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மூடு மந்திரம் எதற்காக?

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கூட்டிய சர்வகட்சிக் கூட்டம் தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் வாய்களை இறுக்க மூடிக்கொண்டிருக்கின்றன. அது ஏன் என்பது புரியவில்லை. அங்கு என்ன பேசப்பட்டது, என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்று உத்தியோகபூர்வ அறிக்கைகள் எவையும் விடப்படவில்லை. இன்று வரும் என்று கூறப்பட்டபோதும் அது நடைபெறுமா என்பதும் உறுதியில்லை.

அரச தரப்பில் மட்டுமல்ல தமிழ்த் தரப்பிலும்கூட எந்தவொரு தகவலும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை. நேற்றைய தினம் இந்தியாவின் குடியரசுத் தின நிகழ்வுகள் கொழும்பில் நடைபெற்றதால், சர்வ கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த தமிழ்த் தலைவர்களிடமிருந்த பேச்சுத் தொடர்பான கருத்துகளைப் பெறுவதும் சிரமமாகவே இருந்தது. பேசியவர்களும் தாங்கள் எதை வலியுறுத்தினார்கள் என்பதை மட்டுமே வெளிப்படுத்தினார்கள். கூட்டத்தில் ஆராயப்பட்ட விடயங்களை முழுமையாக வெளிப்படுத்தவில்லை.

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் கொழும்புக்கு வந்து, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று பகிரங்கமாக, ரணிலையும் வைத்துக்கொண்டு அறிவித்துவிட்டுப் போன பின்னணியில் இந்தக் கூட்டம் முக்கியத்துவம் மிக்கது. அதற்கும் மேலாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்து நாட்டின் சுதந்திர தினத்தில் தான் அறிவிப்பார் என்று ரணில் ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையில் முடிவு என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவும் இந்தக் கூட்டம் முக்கியத்துவமானதாக இருந்தது.

ஆனால் அது குறித்து எந்தவிதமான தகவல்களையும் மக்களுக்கு வெளிப்படுத்தாமல் அதனை மூடுமந்திரமாக வைத்திருப்பது எதற்காக? பேச்சு, தீர்வு என்று வருகின்றபோது அது வெளிப்படையானதாக இருக்கவேண்டியது அவசியம். மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தான் தீர்வு காண முற்படுகின்றார்கள். எனவே அது என்ன என்பதை அறிந்துகொள்வதற்கு மக்களுக்கு முழு உரிமை இருக்கின்றது. கூட்டங்களில் ஆராயப்பட்ட விடயங்களும் எட்டப்பட்ட முடிவுகளும் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

கலந்துரையாடப்பட்ட எல்லா விடயங்களையும் பகிரங்கப்படுத்த முடியாவிட்டாலும், அப்படிச் செய்வது அமைதிக்குலைவுக்கு வழி வகுக்கும் என்று கருதினால், என்ன விடயங்கள் ஆராயப்பட்டன, அது தொடர்பில் எட்டபட்ட சாதகமான அடைவு என்ன பாதகமான அடைவு என்ன, அவ்வாறு அந்த விடயம் பாதகமாக முடிந்ததற்கான காரணங்கள் என்ன என்பவற்றையாவது வெளிப்படுத்தவேண்டும். அதனை அறிந்துகொள்வதற்கு மக்களுக்கு முழு உரிமையும் இருக்கின்றது.

எனவே பேச்சு குறித்த விடயங்களை மூடுமந்திரமாக வைத்திருக்காமல் மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டியது அரசியல்வாதிகளின் கடமை. அதை அவர்கள் நிறைவேற்றவேண்டும்.

# இவ்வருட இறுதிக்குள் பணவீக்கத்தை 4 சதவீதமாகக் குறைக்க எதிர்பார்ப்பு!

## மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வியூகம்



அண்மைய சில மாதங்களாக பணவீக்கம் குறித்தளவால் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில், இவ்வருட இறுதிக்குள் பணவீக்கத்தை 4 – 6 சதவீத மட்டத்திற்குக் கொண்டுவரமுடியுமென எதிர்ப்பார்ப்பதாகத் தெரிவித்துள்ள இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, பணவீக்கம் வீழ்ச்சியடையும்போது அதனுடன் இணைந்ததாக சந்தை வட்டிவீதங்களும் குறைவடையும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாணயச்சபையின் இந்த வருடத்துக்கான முதலாவது கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிலையில், அதில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு புதன்கிழமை மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட மத்திய வங்கியின் ஆளுநர், சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச் செயற்திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நகர்வுகள் தற்போது நேர்மறையான துலங்கலை வெளிக்காட்டுகின்றன எனத் தெரிவித்தார். குறிப்பாக அண்மையில் இந்தியாவால் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதியியல் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அதனைத்தொடர்ந்து சீனா மற்றும் பாரிஸ் கிளப் உறுப்புநாடுகளுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும், அந்தப் பேச்சுகள் சாதகமான பிரதிபலிப்பை வெளிக்காட்டுகின்றன எனவும் ஆளுநர் குறிப்பிட்டார். எனவே அனைத்துக் கடன் வழங்குநர்களிடமிருந்தும் நிதியியல் உத்தரவாதத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என்றும், அதன்மூலம் இயலுமானவரை விரைவாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்துவது குறித்து ஆளுநரின் நிலைப்பாடு என்னவென்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், தேர்தல்களுக்கும் மத்திய வங்கிக்கும் எவ்வித தொடர்புமில்லை என்றும், எனவே அந்தக் கேள்விக்குப் பதில்கூறவேண்டிய அவசியமில்லை என்றும் தெரிவித்தார். அதேவேளை உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களை நடத்துவதற்கு அவசியமான போதியளவு நிதி உள்ளதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த ஆளுநர் நந்தலால் வீரசிங்க, அது அரச திறைசேரியிடம் எழுப்பப்படவேண்டிய கேள்வி என்று சுட்டிக்காட்டினார். அதுமாத்திரமன்றி அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரி அதிகரிப்பு பற்றிய கேள்விக்கு, அது நிதியமைச்சின்கீழ் வகுக்கப்படும் கொள்கை எனவும், அதற்கும் தமக்கும் தொடர்பில்லை எனவும் பதிலளித்தார்.

இதுஇவ்வாறிருக்க, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது துணைநில் வைப்பு வசதி வீதத்தை 14.50 சதவீதமாகவும், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தை 15.50 சதவீதமாகவும் அதன் முன்னைய மட்டங்களிலேயே பேணுவதற்குத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் நேற்று ஆர்ப்பாட்டம்



அரசின் புதிய வரிக் கொள்கைக்கு எதிராக தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

அநீதியான அரசின் தன்னிச்சையான மக்களுக்கு பாதகமான வரிக்கொள்கையை கண்டிப்போம் எனும் தொனிப்பொருளில் பல்வேறுபட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து இக் கண்டன ஆரப்பட்டத்தினை மேற்கொண்டனர்.

அதிகரித்த வரிகளை வசூலிப்பதன் மூலம் பொதுத்துறையில் பணியாற்றும் தொழில்வாண்மை மிக்கோருக்கான ஊதியத்தினை குறைப்பதற்கு அரசு முயற்சிப்பதுடன் மட்டும் நின்றுவிடாமல், அவ்வாறு வரிகள் விதிக்கப்படுவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத்தான் என்ற போலியான பிரச்சாரத்தினையும் முன்னெடுத்து வருகின்றது . ஆனால் எமது வரிகள் மூலம் திரட்டப்படும் பணம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்திற்காக ஒரு போதும் பயன்படுத்தப் படபோவதில்லை.

இந்த வரி அதிகரிப்பு நியாயமற்றது என்பது மட்டுமல்ல. இதனால் எமது தேசம் அதன் சாத்தியமான முழு வளத்தினையும் இழக்கும் அபாயம் உள்ளது .என்ன விலையினைக் கொடுத்தாவது இம்மோசமான பேரிடர் நிலையினை முற்றுமுழுதாகத் தடுக்க வேண்டும். எமது நாட்டில் இன்று நிலவுகின்ற பொறுப்பற்ற, அநீதியான நிலை குடிமக்களை ஆதரவற்ற நிலைக்குத் தள்ளியுள்ளதனையும் இங்கு நாம் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது என்ற விடயத்தை மையப்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பட்டத்தினை மேற்கொண்டனர்.

இக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம், இலங்கை மின்சார சபை ஊழியர்கள், சங்கம் வைத்தியர்களின் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

# சர்வதேச நாணயநிதிய கடனுதவியை பெறும் இலங்கையின் முயற்சிக்குப் பிரிட்டன் ஆதரவு

கொழும்பு, ஜன. 27

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து கடனுதவியை பெறும் இலங்கையின் முயற்சிக்கு ஆதரவளிப்பதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பாரிஸ் கிளப்பின் உறுப்பினர் என்ற அடிப்படையில் சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து கடனுதவியை பெறும் இலங்கையின் முயற்சிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்துள்ளது

வட்டிப் பணத்தைக் கொடுக்காதவரை அடித்த குற்றத்துக்காக

# அளவெட்டியை சேர்ந்த கூலிப்படை நபர் கைது

வட்டிக்குப் பணம் பெற்றவர்களிடமிருந்து அதனை வசூலிப்பதற்குக் கூலிப்டையாகச் செயற்பட்டார் என்கிற குற்றச்சாட்டில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பபட்டிருக்கின்றார்.

கடன் பணத்தைத் திருப்பிச் செலுத்தாத ஒருவரை அந்த நபர் மிக மோசமாகத் தாக்கும் காணொலி சமூக ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், மீற்றர் வட்டிக்கு பணம் பெற்ற இருவரை தோட்டக் காணி ஒன்றுக்கு அழைத்துச் சென்று கொடூரமாகத் தாக்கி துன்புறுத்தும் காணொலி சமூக ஊடகங்களில் வைரலாகி இருந்தது. இதையடுத்தே பொலிஸார் அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதுபோன்று பலரும் துன்புறுத்தப்படும் 20 காணொலிகள் இப்போது பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. சுன்னாகத்தில் கார் ஒன்றை வாகனத்தால் மோதி அதிலிருந்தவர்களை வாள்களால் வெட்டிய சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கைது செய்யப்பட்டிருக்கும் மருதனார் மடத்தைச் சேர்ந்த ஜெகன் இதேபோன்ற குற்றங்களோடு தொடர்புடையவர் என்று பொலிஸாரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளத்தில் தற்போது பரவிவரும் காணொலி ஒன்றரை வருடத்துக்கு முன்பாக எடுக்கப்பட்டது என்றும், தற்போது அந்தக் குழுவுக்குள் முரண் ஏற்பட்டுள்ளதால் அவை வெளியாகியுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அடித்து துன்புறுத்தல் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களினால் எந்த முறைப்பாடும் பொலிஸில் முன்வைக்கப்படவில்லை. எனினும் தற்போது வெளியாகியுள்ள காணொளிகளின் அடிப்படையில் அளவெட்டியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் – என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## 13ஐ ஒழிக்கவேண்டும் .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழு ஒன்றை உருவாக்குவதற்கான சட்டத் திருத்தத்தை தான் நாடாளுமன்றத்தில் பெப்ரவரி 8ஆம் திகதி முன்வைப்பார் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரி வித்தவை குறித்து உத்தியோகபூர்வ மான தகவல்கள் எவையும் வெளியிடப்பட வில்லை. எனினும் கூட்டத்தில் அவர் ஆற் றிய உரை தொடர்பில் காலைக்கதிர் அறிந்துகொண்ட விடயங்கள் வருமாறு:

நிறைவேற்று அதிகாரம் கொண்டது எனது பதவி. அந்த வகையில் இருக்கும் சட்டத்தை நான் நடைமுறைப்படுத்துவேன். அரசமைப்பில் 37 ஆண்டுகளாக 13ஆவது திருத்தம் உள்ளது. நான் அதனை நடைமுறைப்படுத்தவேண்டும். அப்படிச் செய்யாமல் இருக்கவேண்டுமானால் யாராவது 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்யவேண்டும்.

இந்த இரண்டில் ஒன்று நடக்கவேண்டும். 13ஐ இல்லாது ஒழிக்காவிட்டால் அதனை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும். தனிப்பட்ட வரைவைக் கொண்டுவந்து யார் வேண்டுமானாலும் அதனை நீக்க முயற்சிக்கலாம். நாடாளுமன்றத்தில் அதற்குப் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காவிட்டால் அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது. அப்போது நான் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த நேரிடும்.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதால் நாடு பிளவுபடாது. இந்தத் திருத்தம் குறித்து 5 நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பின்படி, இந்தத் திருத்தத்தின்படி நாம் ஒற்றையாட்சியிலேயே இருக்கின்றோம்.

ஏனைய இனங்களுடனும் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு நான் உடன்படுகின்றேன். நாம் உருவாக்கி வைத்துள்ள மாகாண சபைகளுக்கு லண்டன் மாநகர சபைக்கு உள்ள அதிகாரம்கூடக் கிடையாது. அங்கு இதைவிட கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே இந்த 13ஆவது திருத்ததை நடைமுறைப்படுத்துவதால் இது சமஷ்டி ஆட்சிமுறையாகிவிடாது – என்றார்.

## கஞ்சா கடத்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்டைத்தீவு பகுதிகளைச் சேர்ந்த 25, 32, 42 ஆகிய வயதுகளையுடையவர்களாவர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தி விளக்கமறியலில் வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

## சர்வதேச குற்றவியல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமைப்புக்கள் இது தொடர்பில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்தி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன. .

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தனது சுயசரிதையில் இலங்கை மோதலின் இறுதிக் கட்டங்களில் இனப்படுகொலையை ஐக்கிய நாடுகள் அமைப்பு தடுக்கத் தவறியது என்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டியுள்ள தமிழர் அமைப்புக்கள் அதனைக் கருத்திக்கொண்டு இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கேட்டுள்ளன.

போர்க் குற்றத்திற்காகவும், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களிற்காகவும் அரசு தங்களிற்கு எதிராக மேற்கொண்ட இனப்படுகொலைக்காகவும் இலங்கையை சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தவேண்டும் என தமிழ் மக்கள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்துவருகின்றனர் என்பதையும் தமிழ் அமைப்புக்கள் தமது கடிதத்தில் அழுத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

அமெரிக்க நிர்வாகம் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான குரலுக்கு ஆதரவளிக்கவேண்டும், ஈழத் தமிழர்கள் தங்கள் நிலையை மக்களாட்சி தத்துவ ரீதியிலும் அமைதியான முறையிலும் தீர்மானிப்பதற்கான சுதந்திர வாக்கெடுப்பை நடத்துவதற்கான முயற்சிகளிற்கு ஆதரவளிக்கவேண்டும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் தனக்குள்ள செல்வாக்கை அமெரிக்கா பயன்படுத்தவேண்டும், இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களிற்கு எதிராக இனப்படுகொலையில் ஈடுபட்டது என்பதை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கவேண்டும் ஆகிய கோரிக்கைகள் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## சொல்லும் செயலும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 250

கலாநிதி ஜெய்சங்கர் தமிழ் கட்சிகளை சந்தித்து திரும்பிய பின், யாழ்ப்பாணியின் Jaffna Gallery 'பிரம்மாஸ்திரம்' என்கின்ற ஊடக அரசியல் பிரிவு தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் நடத்திய செவ்வியில் வழமை போலவே, தாங்கள் மாத்திரமே தமிழ் தேசியத்திற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்கிறார்கள், மற்ற தரப்புகள் யாவும் தேசியம், சமஷ்டி என்று பேசி வாக்குகள் பெற்று, நாடாளுமன்ற



பிள்ளையான்

ஆசனங்களைக் கைப்பற்றி விட்டு, அதற்குத் துரோகம் செய்து, தற்பொழுது 13ஆம் திருத்தத்தை முதற்படியாக பேசுகிறார்கள், அது இந்தியாவின் கைப்பொம்மைகளாகவே, முகவர்களாக, இயங்குபவர்களின் ஏமாற்று தந்திரங்கள், அதற்கு மேல் அவர்கள் எதுவுமே செய்ய முடியாது, தாங்கள் அவர்களுடன் சேர்ந்து சந்திப்புக்குச் சென்றது அவர்கள் நடத்தும் நாடகங்களை அம்பலப்படுத்துவதற்காகத்தான் எனக் கூறினார்.

புலம்பெயரின் சில பகுதிகளில் இருந்து வரும் பதிவுகள் போல, இவர்களது நோக்கமும் மற்றவர்களை அம்பலப்படுத்துவதை தவிர, தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துச் செல்ல ஏதாவது உருப்படியான திட்டங்கள், செயற்பாடுகள் இருப்பதாக தெரியவில்லை. துருவித் துருவி, பல தமிழ் தரப்புகள் நிலைமையுணர்ந்து, யதார்த்தமான வழிகளைப் பரிசீலிக்கும் போது, அவர்கள் மட்டும் இணைந்து போகாமல் நிற்பதால் அது தமிழ் மக்களுக்கு பிரயோசனமானதாக என்று கேள்விகளுக்கானன பதில்கள் கூட, அப்படிப் போகிறவர்களை அம்பலப்படுத்துவது தான் முக்கியம் என்று என்றே இருந்தது. எப்படி புலம்பெயரில் இருக்கும் விடுதலை புலிகளும், அவர்களுக்கு ஆதரவான தரப்புக்களும் தாம் தமிழ் மக்களின் இலட்சியத்திற்காகத் தொடர்ந்து போராடுவோம் என்று கூறினாலும், மாற்றுத்திட்டம் எதுவும் முன் வைக்க முடியாமல் இருக்கிறார்களோ, அதே போல் கஜேந்திரகுமாரின் முன்னணியும் பேசலாம், ஆயின் நடைமுறை திட்டங்கள் அற்று, வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தில் மக்களை அணிவகுத்து, மக்கள் இதனை சொல்கிறார்கள் என ஆர்ப்பரிக்கலாம். மேலும் அழுத்தங்கள் தரப்பட்டால், இரண்டு பகுதியினருமே ஐ.நாவின் மனித உரிமை சபை இருக்கிறது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உண்டு என சர்வதேசம் தம்பக்கம் இருப்பதாக பேசுவார்கள். இந்த அமைப்புகளுக்கு அங்கு ஐ.நாவில் தமிழ் மக்களது அரசியல் கோரிக்கைகளின் இருப்பு அவர்கள் அறியாததல்ல. அதே சமயம் பிராந்தியத்தில் இன்றைய நிலையில் இந்தியாவின் ஆளுமையும், அதனை மீறி எதிர்த்து நின்று சர்வதேச ஆதரவை பெற்றுக் கொள்ள புவியியல் நிலைப்பாடுகள் மாறினாலே ஒழிய சாத்தியங்கள் அறவே இல்லை என்பது புரிந்து இருந்ததால், ஊடக சந்திப்பில் அப்படி இந்தியாவை மீறி ஏதும் செய்ய முடியாததால் தான் மற்றவர்கள் யாவரும் முகவர்களாகவும், முன்னைய அவர்களின் ஒட்டுக் குழுக்களும் ஆதரவாகத் தொடர்ந்தும் செயற்படுகிறார்கள், ஆனால் தாங்கள் தங்களது நிலைப்பாட்டிலேயே தொடர்ந்து நிற்பார்கள், அந்த நிலையை ஏற்று தங்களோடு பேச விரும்பினால் பேசுவோம் என்று மேலும் தெரியப்படுத்தினார்.

ஆக, தமிழ் மக்களின் உரிமை போராட்டமும், பின்னரான விடுதலைப் போராட்டமும் இவர்கள் போன்றவர்களின் செயல் திட்டங்கள் இல்லாத – தூர தரிசன மற்ற – பிடிவாதங்கள் நிறைந்த – வரலாறுகளாலேயே நிரப்பப்பட்டுள்ளது.

1983 வரை மிதவாதத் தலைவர்கள் வீராவேசப் பேச்சுக்கள் செய்துவிட்டு, தங்களை மல்லு பிடிக்குமாறு தமிழ்நாட்டு தலைவர்களிடம் ஓடினார்கள். பின்னர் ஆயுத குழுக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வீரம் விழைத்தாலும் அவற்றின் பெறுபேறுகள் எவற்றால் விளைந்தன என்று உணர்ந்து கொள்ளலாம்.

கடலில் பயணிக்கும் கப்பல், பலமான காற்றில் சிக்கி, அல்லல்படும்போது, அதில் பயணிப்பவர்களில் சிலர் எல்லாம் முடிந்தது, கெட்டுவிட்டது என்ற மனப்பாங்கில் நம்பிக்கை கெட்டு, சோர்வடைந்து விடுவார்கள். வேறு சிலர், இதுவும் ஏதோ ஒரு நன்மைக்கே, கடைசியில் ஏதோ நன்மை



கருணா

வந்து சேரும் என்ற நம்பிக்கையை மேற்கொள்ளுவார்கள். ஆனால் சாத்தியமானவற்றை சிந்திப்பவர்கள், எது செய்ய முடியுமோ அதனை யதார்த்தமாகச் செய்வதற்காகக் காற்றோட்டத்தின் தன்மைகளுக்கு ஏற்ப கப்பலின் பாய் மரங்களை அனுசரணைக்காகச் சரி செய்வார்கள்.

தத்தளிக்கும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டங்களில் எல்லாத் தமிழ்த் தரப்புக்களும் தாம் விரும்பியபடி பேசி, சமர்ப்பணங்களும் தந்து, சர்வதேசம் தங்களை (அன்றில் ஸ்ரீலங்காவைச் சும்மா விடப்போவதில்லை) கைவிடாது எனப் பய



கஜேந்திரகுமார்

ணித்த நேரங்களில், கலாநிதி ஜெயசங்கர் அவர்கள் யாவரையும் ஒன்றாக வைத்து, நேரடியாக, நிதர்சனமாக தெரிவித்த கருத்துக்களை காற்று அவர்கள் பயணித்த படகுகளை உலுப்புகிறது, அவர்களில் யார், எந்த வர்க்கம், எது பாதையாகலாம் எனப் பார்க்கும் முன், சிங்கள பேராண்மைகள் எப்போவோ குழிபரப்பிற்கான அவர்களது செயற்பாடுகளை முன்னெடுத்து, என்ன திட்டங்களை, ஆளணிகளை 13ஆம் திருத்தத்தை தந்தும், தராமல் ஆக்குவதற்கு கை கொண்டுள்ளார்கள் அல்லது தங்களுடன் இணைந்து இயங்கும் அன்றில் சேவகம் செய்வோர் கைகளில் தருவதற்கு முயலும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

### சதுரங்கங்கள்

பிள்ளையான், கருணா இருவரது கட்சிகளையும் வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலில் போட்டியிட பஸில் ராஜபக்ஷ விடவிருக்கும் திட்டத்தை முன்னர் பதிவிட்டிருந்தேன். தற்பொழுது பஸ்ஸில் மொட்டு கட்சி யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் வீணை சின்னத்திலும், கிழக்கில் பிள்ளையானின் கப்பல் சின்னத்திலும் போட்டியிடும் என அறிவித்திருக்கிறார்.

இரட்டை வேடம் போட்டு மட்டக்களப்பு மாவட்ட மக்களை தமிழ் மக்கள் விடுதலைக் கட்சி – அதாவது பிள்ளையானின் கட்சி – மேலும் ஏமாற்ற முடியும் என நினைக்கிறார், முதுகெலும்பு உள்ளவரானால் நேரடியாகவே மொட்டுக்காக போட்டியிடலாம் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சவால் விட்டு உள்ளார். தமிழ் மக்களின் அனேகமான, ஏன் ஒரு வகையில் எல்லா தரப்புக்களுமே, தாங்கள் இன்றிருக்கும் நிலைக்கு தாங்களும் முக்கியமான காரணம் என்பதை ஏற்காமல், மற்றவர்களிலேயே குற்றங்களைச் சுமத்தி, அவற்றையே திரும்பத் திரும்பச் சொல்லி நம்பிக் கொண்டிருக்கிறார்கள். தங்களது ஒற்றுமையீனங்கள்தான், மற்றவர்கள் அவர்களின் சில பகுதிகள் பாவித்து பயனடைந்தார்கள் என்பதை மறுக்கிறார்கள்.

டாக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் என்போர் முக்கியமாக ஏன் உருவானார்கள்? அவற்றுக்குரிய காரணங்களை ஒவ்வொருவரும் ஆராய்ந்தால் ஒவ்வொருவரின் உள்மனம் அதற்குரிய விடையைத் தரும்.

போரின் முடிவில் ஜனாதிபதி மஹிந்த மனித உரிமைகள் சபையில் தான் நடத்திய பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கு ஆமோதிப்பு பெற, இடதுசாரி கொள்கை பாட்டில் இருந்த கலாநிதி தயான் ஜெயதிலகவைப் பயன்படுத்தினார். முன்னைய ஈ.பி.ஆர்.எல்.எவ். அங்கத்தினராக இருந்து, விடுதலைப் புலிகளைப் பற்றி நன்கு அறிந்தவர் என்பதால் ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக அவரைத் தெரிந்து, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் வெற்றியும் பெற்றார் மஹிந்தர். அதேபோல் கருணா விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்தோ, அல்லது யாராலோ பிரிக்கப்பட்டு, ஸ்ரீலங்கா இராணுவத்தின் பாதுகாப்பிற்காக வந்த போது, ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா கருணாவை அரசியல் கட்சி ஒன்றை பதிந்து அரசியல் செய்ய அனுமதிக்கவில்லை. ஆனால் இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களுக்காக அவரை பிழிந்து எடுத்தார்கள். பின்னர் மஹிந்த ஜனாதிபதியானதும்தான் கருணாவை அரசியலுக்கும் இராணுவ ரீதியிலும் பயன்படுத்தினார். அவர்கள் அரசியலில் தடம் பதிக்க முற்பட்டபோது காட்டில் ஆயுதங்களுடனே பழகிப்போன இவர்களை நாட்டுக்குள் குடிமக்களுடன் உள்ளிருத்தி இணைந்து அரசியல் செய்ய உதவியவர் டக்லஸ்தான்.


அவர் முன்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். அங்கத்தினரும் பத்மநாபாவுடன் 19 ஜூன் 1990 ல் விடுதலைப் புலிகளால் தமிழ் நாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட மொஹமட் அலியாஸ் மொஹமட் மிகிலார் என்பவரின் பட்டதாரி மாணவனும், பத்திரிகை துறையில் ஈடுபட்டிருந்தவருமான ஆஸாத் மௌலானாவை அறிமுகப்படுத்தி. கருணா, பிள்ளையான், குகநேசன் போன்றோர் ஒன்றாக இருந்ததனால் கருணாவினது 'தமிழ் அலை' என்ற பத்தி



ஜெய்சங்கர்

ரிகையும் நடத்தி ஆஸாத் மௌலானா அவர்களது அரசியல் ஆசானவாகும் பங்காற்றினார். கருணா, பிள்ளையான் இருவருமே அதிகமாகப் படிக்கவில்லை. பிள்ளையான் சிறு பராயத்திலேயே இயக்கத்தில் சேர்ந்தவர். இருவருக்குமே ஆங்கிலத் தேர்ச்சி, அரசியலை சர்வதேச பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இருக்கவில்லை. அவற்றுக்குத் துணையாக இருந்து, அந்த முக்கியமான கால கட்டங்களில் அவர்களுடன் பயணித்த ஆஸாத் மௌலானா, தற்சமயம் ஈஸ்டர் குண்டு தாக்குதல்களில்ராணுவத்துடன் எழுந்த முரண்பாடுகளால், ஐரோப்பாவின் ஒரு தலைநகரில் அரசியல் தஞ்சத்தில் வாழ்கிறார் எனவும், அவரால் அந்தக் காலகட்டம் பற்றி மனித உரிமைச் சபைக்குத் தரப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என இணையப் பதிவு ஒன்று செய்யப்பட்டது, அதன் பிரதி ஒன்றும் பெற்றேன். அதனைப் பற்றிய ஆதங்கங்களையும், அவற்றிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியஎதிராளிகளின்நகர்வுகளையும் நாளை பார்க்கலாம்.

(வளரும்....)



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# இன அரசியலுக்கு மத சாயம்

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

யாழ்பாண மாநகர மேயர் தேர்தல் சட்டத்தில் உள்ள ஓட்டை என்ற கொள்ளலாம். அல்லது, அதுவே சட்டத்தின் சரியான நிலை என்றும் கூறலாம். எப்படியோ, ஆனல்ட் யாழ்ப்பாண மேயர் அல்லது தலைவராக ஒருமனதாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று அரசு கூறுகிறது. அந்த விடயம், தற்போது நீதிமன்றில் இருக்கிறது. தீர்ப்பு வரும் வரையிலோ அல்லது எதிர்வரும் தேசிய அளவிலான உள்ளாட்சி தேர்தல்களின் முடிவு வரும் வரையிலோ, அவரது தலைமைத்துவத்தை படாதபாடு படுத்தி, அவரை இரண்டாவது முறையும் பதவி இழக்க வைக்கலாம்.

இதில் விசேடம் என்னவென்றால், கடந்த முறை தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் களமிறங்கிய ஆனல்ட், இந்த தடவை தமிழ் அரசு கட்சியை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளார். அதற்கு, யாழ்பாண மாநகர சபையில் நிலவிவரும் உள்குத்து அரசியல் காரணமல்ல. மாறாக, அடுத்து வரும் உள்ளாட்சி தேர்தல் காரணமாக கூட்டமைப்பு பிளவுபட்டதே இதற்கு காரணம்.

ஆனால், விடயம் அதுவல்ல. முந்தைய நாள் வரை, தமிழ் அரசு கட்சி தன்னை யாழ். மாநகர தலைவராக முன்னிறுத்தவில்லை என்றால், அரசியலில் இருந்தே ஓய்வு பெறபோவதாக தலைமையை மிரட்டிய சொலமன் சிறில், அடுத்த நாளே பெட்டிப் பாம்பாக அடங்கி, ஆனல்டின் பெயரை தானே மேயர் தேர்தலில் முன்மொழிந்தார். ஆனால், தனது மனமாற்றத்திற்கு அவர் கூறிய காரணம் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையம் ஒரு சேர அளித்தது.

போட்டியில் இருந்த சிறில், ஆனல்ட் ஆகிய இருவருமே கிறிஸ்தவர்கள். இந்த பின்னணியில், கத்தோலிக்க திருச்சபையின் அறிவுறத்தலுக்கு இணங்கவே, ஆனல்டுக்கு ஆதரவாக போட்டியிலிருந்து தான் விலகினார் எனச் சிறில் அறிவித்தது தமிழ் இன அரசியல் பரப்பில் புதிய ஒரு திருப்பத்திற்கு வித்திட்டுள்ளது என்றே தோன்றுகிறது. தங்களுக்குள் யார் பெரியவன் என்ற போட்டி மனப்பான்மையை ஓரம் கட்டிவைத்துவிட்டு, இந்த பிரச்சினையை ஒட்டுமொத்த தமிழ் தலைமைகள் வளரவிடாமல் தடுக்காவிட்டால், தமிழ் அரசியலே சின்னாபின்னமாகும் நிலைமை உருவாகலாம்.

### புதிய பரிமாணம்

சொலமன் சிறில், கத்தோலிக்க திருச்சபை குறித்து பேசும் முன்னரே, யாழ்ப்பாண மாநகர சபையில், சைவத்தை சேர்ந்த ஒருவரே மேயராக தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று சிவசேனை அமைப்வின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை விடுத்திருந்தார். அந்த அமைப்பு அரசியல் சார்ந்ததா இல்லையா என்பது வேறு விடயம். அந்த அமைப்பின் அறிவுறுத்தலின்படி, நடந்து முடிந்த(?) யாழ். மாநகர மேயர் தேர்தலில் தமிழரசு செயல்படவில்லை.

தொடர்ந்து, மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் உள்ளாட்சி தேர்தல்களில், எந்தவொரு தமிழ் கட்சியுமே, வடக்கிலும் கிழக்கிலும், அப்பட்டமாக, மதம் மற்றும் ஜாதி அடிப்படையில் வேட்பாளர்களை தேர்ந்தெடுப்பார்கள் என்று கருதுவதற்கு இடமில்லை. அது போன்றே, எத்தனை வாக்காளர்கள் மதம் அல்லது ஜாதி அடிப்படையில் தேர்தலில் வாக்களிப்பார்கள் என்பதும் பிறிதொரு விடயம்.

ஆனால், சச்சிதானந்தத்தின் கருத்து காரணமாக, சைவத்தை ஒட்டிய தமிழர் அரசியல், ஒரு புதிய பரிமாணத்தை எட்டி உள்ளது, என்பதே இங்கு கருத்தில் கொள்ளப்படவேண்டும். இது வளர்ந்து, விருட்சமாகுமா, அல்லது தேய்ந்து காணாமல் போகுமா, என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயம்.

### உரிமையும் கடமையும்

இந்தப்பின்னணியில்தான், சிவகுரு ஆதீன மடாதிபதி வேலன் சுவாமிகள் போன்றோர் நேரடி அரசியலில் குதிப்பதும் ஆலோசிக்கப்படவேண்டும். அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு உரிமையும் கடமையும் இருக்கிறதா, என்பது ஒரு விடயம். ஆனால், அவ்வாறு வேலன் சுவாமிகள் மற்றும் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆகியோர் அரசியல் அறிக்கைகள் விடுத்தாலே, அவை எவ்வாறு புரிந்துகொள்ளப்படுகிறது, யாரால் புரிந்துகொள்ளப்படுகிறது, என்பதெல்லாம்கூட ஆராயப்பட வேண்டும்.

அவர்களது கொள்கைகளும் வழிமுறைகளும் சரியோ – தவறோ, விடுதலைப் புலிகள் இயக்கும் செயல்பெற்று இருக்கும் வரை, இன பிரச்சினையில் மதம் மற்றும் ஜாதி சார்ந்த அரசியல் புகாதவாறு பார்த்துக்கொண்டனர். அவர்கள் காலத்திற்கு முன்னர், தந்தை செல்வா தமிழ் அரசுக் கட்சியைத் துவங்குவதற்கு முன்னர், தமிழ் அரசியல் பரப்பு, வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் இந்து மதத்தவர்களின் விளையாட்டுக் களமாகவே இருந்தது. அதிலும் குறிப்பாக, யாழ்பாண வெள்ளாளர் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளே, தமிழர் அரசியலாக இருந்தது.

அந்தக் காலகட்டத்தில், படித்தவர்களின் அபிலாஷைகள், மெத்த படித்தவர்களின் தலைமை என்ற விதத்தில், வெள்ளாளர் சமூக தலைமை என்பது தவிர்க்க முடியாத விடயம் எனலாம். ஒரு வகையில், விடுதலை புலிகள் இயக்கத்தின் பிரபாகரனே தமிழர் அரசியல் பரப்பில் பள்ளிபடிப்பைகூட முடித்திராத சாமான்யன் தலைவரான ஒரே நிகழ்வு. என்றாலும், தமிழரசு கட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் கூட, பெரிய அளவில், மதம் மற்றும் ஜாதி அரசியலாக இல்லாது, இன அடிப்படையிலேயே இருந்தது.

தந்தை செல்வா காலம் தொடக்கம், தற்போதுவரை, தமிழர் அரசியலில் மதம் மற்றும் ஜாதி பிரச்சினைகள் வெளிப்படையாகவும் வெகுவாகவும் தலை தூக்கவில்லை. மாறாக, ஜி.ஜி. பொன்னம்பலம் தொடக்கம், ஏன், அவருக்கு முந்தைய காலகட்டத்திலும், அன்றைய தமிழர் தலைமைகளை அனைத்துத் தரப்பினருமே ஏற்றுக் கொண்டிருந்தனர். தந்தை செல்வா – வாகட்டும், பின்னர் அமிர்தலிங்கம் ஆகட்டும், அவரைத் தொடர்ந்து, பிரபாகரன் ஆகட்டும், தற்போது, சம்மந்தன் ஆகட்டும், அனைவரும் காலத்திற்கும் நேரத்திற்கும் பொருந்திய தலைவர்களாவே பெருவாரி தமிழ் மக்களால் பார்க்கப்பட்டனர்.

### கோரிக்கை, எச்சரிக்கை

இனப்போர் முடிந்த காலகட்டத்தில், மஹிந்த அரசுடன், தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சு நடத்தியது. அதில், பெரும் முன்னேற்றங்களும் ஏற்பட்டன. ஆனால், தமிழ் சமூக அமைப்பினருடன் கலந்தாலோசித்து மட்டுமே, கூட்டமைப்பு பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற ஒரு கோரிக்கை அல்லது எச்சரிக்கை எழுந்தது.

அந்தக் காலகட்டத்தில், சமூக அமைப்புகளுக்கு அன்றைய மன்னார் ஆயர், மேதகு ஆண்டகை இராயப்பு ஜோசப் தலைமை வழங்கினார். ஏன், கூட்டமைப்பு தலைமையுடனான சமூக அமைப்புகளின் பேச்சுக்கு, அவரே அழைப்பு விடுத்தார். மன்னார் சர்ச் சார்ந்த இடத்திலேயே அந்த பேச்சு நடந்தது என்பதாக நினைவு.

அப்போது, சமூக அமைப்புகளை கலந்தாலோசித்து, அவர்களின் அனுமதியுடனே, கூட்டமைப்பு அரசுடனான பேச்சில் கலந்துகொள்ள வேண்டும். மற்றும் கருத்துக்களை முன்னெடுத்து வைக்கவேண்டும் என்ற வாதத்தை கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. பேச்சுக்களின் நீள – அகலம் மற்றும் ஆழம் காரணமாக, அனைத்து விடயங்களையும் பொது வெளியில் முன்கூட்டியே விவாதிக்க முடியாது என்பதில், சம்மந்தன் தரப்பினர் உறுதியாக இருந்தனர். அதுவே சரியான நிலைபாடும் கூட.

அந்தக் காலகட்டத்தில், அதற்கு பின்னரும்கூட சம்மந்தனின் தலைமைத்துவத்தையும் மன்னார் ஆயரின் தலையீட்டையும், யாருமே மதச்சாயம் பூசி பார்க்கவில்லை. காரணம், இனப் பிரச்ச்சினைக்கு அப்பால் சென்று, யாரும், மதம் மற்றும் ஜாதி குறித்து எந்த கருத்தும் கூறவில்லை. அதைவிட முக்கியமாக, இனப்பிரச்சினைகளின் அலகுகளை, யாரும் மதம் மற்றும் ஜாதி பார்வையில் அணுகவில்லை.

### தனி தலமை, தனித்துவ தலைமை

தற்போது, மத ரீதியான கருத்துக்கள் உள்வாங்கப்படுவதற்கு காரணம், தமிழர் அரசியல் தலைமையினுள்ளே, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு தோன்றியுள்ள பிரிவுகளும், பிரிவினைகளும்தான். இதற்கு முன்பாக, பல்வேறு தமிழ் கட்சிகள் செயல்படவில்லையா, என்றகேள்விஎழும். ஆனால், அப்போது எல்லாம்கூட, அவர்கள் அனைவரையும் தூக்கிச் சாப்பிடும் அளவிற்கு ஒரு தனி தலைமை, தனித்துவ தலைமை நிலவியது.

ஆனால், தற்போதைய நிலைமை அதுவல்ல. எப்போது, சம்மந்தன் உடல் நலம் குன்றினாரோ, எப்போது, செல்வம் அடைக்கலநாதன் போன்றோர் அவரது தலைமையை கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்கினார்களோ, அப்போதே, தமிழ் அரசியல் தலைமை ஆட்டம் கண்டுவிட்டது. அதற்காக, அவர்கள் மட்டுமே இதற்கான காரணம் அல்ல். இந்த தலைமைத்துவ பிரச்சினை இன்று இல்லையென்றாலும் நாளை வெடித்திருக்கும்.

ஆனால், வட மாகாண முதல்வராக விக்னேஸ்வரனின் செயலின்மை, அவரை கட்டுக்குள் வைத்திராது, அவருடன் பேச்சையே முறித்துக்கொண்டு, இது என்னவோ அவர்களது சொந்த பிரச்சினை என்பது போல செயலாற்றிய சம்மந்தன், போன்ற பலரும் தமிழ் சமுதாயத்தின் தற்போதைய அவலநிலைக்குக் காரணம். ஆனால், மக்களின் அன்றாட நிலைமை அவலமாக இருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளக்கூட அவர்களில் பலருக்கும் நெஞ்சில் ஈரம் இல்லை. வீரம் இல்லை.

### உலக நீதி

சரித்திர ரீதியாக, எப்போதெல்லாம் அரசியல் தலைமைகளில் ஒரு தொய்வு விழுகிறதோ, எப்போதெல்லாம், அரசியல் பரப்பே, பலமிழந்து விடுகிறதோ, அப்போதெல்லாம், அடிப்படைவாதிகள் தலைமைத்துவத்திற்கு தங்களுக்குள்ளேயே அடித்து கொள்வார்கள். இது உலக நீதி. அதுவே இங்கும் தலைவிரிக்கத் துவங்கி உள்ளதோ என்ற அச்சம் தோன்றுகிறது.

அந்த வித்தில், தெற்கே ஜேவிபி மற்றும் வடக்கே தமிழ் போராளி குழுக்கள் துவங்கி, செயல்பட்டு, முக்கியத்துவம் பெறுவதற்கு, மிதவாத அரசியல் தலைமைகளின் செயல்பாடின்மையே காரணம். சர்வதேச அளவில், எப்போது சோவியத் யூனியன் என்ற வல்லரசு காணாமல் போனதோ, அப்போதே, சூப்பர் பவர் அமெரிக்காவிற்கு செக் வைக்கும் சக்தியாக, அவர்களாலேயே வளர்க்கப்பட்ட, அல் கொய்தா அமைப்பு உருமாறியது.

தற்போது, அல் கொய்தா காணாமல் போன பிறகே, அந்த இடத்தை நிரப்பும் வகையில் சீனா உருவெடுத்து வருகிறது. அதாவது, நாடு, அரசு என்ற வரையறைக்குள்பட்ட சீனா என்ற எதிரி, முன்னரே அந்த அளவிற்கு வளர்ந்துவிட்டது என்று, அமெரிக்கா தலைமையிலான மேற்குலகு ஏற்றுக்கொண்டிருந்தால், அல்கொய்தாவும், ஒசாமா பின்லேடனும் இத்தனை தூரத்திற்கு வளர்ந்திருக்க மாட்டார்கள்.

### கேடகாத மன்னிப்பு

1990இல் வடக்கில் வாழ்ந்த தமிழ் பேசும் முஸ்லீம் மக்களை விடுதலை புலிகள் துரத்தி அடித்தார்கள், கிழக்கில், சுட்டு கொன்றார்கள். இனப்போர் முடிவுறுவதற்கு தொடக்கமான மூத்தூர் சம்பவத்தின்போதுகூட அங்கு வாழ்ந்து வந்த முஸ்லீம் மக்களை, துப்பாக்கி முனையில், மனித கவசமாக பயன்படுத்தி, இராணுவத்தினரின் வெப்பம் தேடி தாக்கும் குண்டுகளுக்கு இரையாக்கினார்கள்.

இவை எல்லாம் நடந்து முடியும் வரை, முஸ்லிம் மக்கள், தமிழர்களின் எதிரிகள் என்றும், அரசின் கைகூலிகள் என்றும் முத்திரை குத்தினார்கள். இதே முத்திரையை தங்களில் பலருக்கும் குத்தி விடுதலை புலிகள் இயக்கம் அவர்களை கொலை செய்த பிறகாவது, தமிழர் தரப்பிற்கு தாங்கள் செய்த தவறுகள் புரிந்ததாகவோ, அது குறித்து அவர்கள் வேதனைபடுவதாகவோ தெரியவில்லை.

ஆனால், தற்போது, வடக்கு – கிழக்கு இணைப்பிற்கு மட்டும் முஸ்லிம் மக்களின் ஆதரவு வேண்டும். ஆனாலும், இன்று வரை, சம்மந்தன் உள்ளிட்ட யாருமே, முஸலீம் சமுதாயத்திடம் மன்னிப்பு கேட்கவில்லை. அதேசமயம், கடைசிப் போரில் உயிரிழந்த தமிழர்களை காரணிகளாக்கி, கொழும்பு அரசு தலைமை பொறுப்புகூறல் விடயத்தில் சாவதேச பொறிமுறை வேண்டும் என்ற போராட்டம் மட்டும் தொடரும். என்னே, தமிழனின் மனிதாபிமானம், மனித உரிமை குறித்த கூர் அறிவு!

காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# பதினாறு சம்பத்துக்களையும் அள்ளித்தரும் கோ பூஜை பற்றி அறிவோம்



நமது இந்து மதத்தில் கோமதாவாகிய பசுவை வணங்குவது பெரும் புண்ணியமாகக் கருதப்படுகிறது.

பசுவின் உடல் முழுவதும் தேவர்கள் வசிப்பதாக ஐதீகம். ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தேவர்கள் வசிக்கின்றனர். அதனால் தான் பசுவை வலம் வந்து வணங்கினால் முப்பது முக்கோடி தேவர்களை வணங்கின புண்ணியம் கிடைக்கும் என்கிறார்கள் சான்றோர்கள்.

பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம்.எனவே கோமாதா பூஜை செய்யும் போது பசுவை முன்புறமாக தரிசிப்பதைவிட பின்புறம் தரிசனம் செய்வது மிகவும் நன்மை தரும்.

கோ பூஜை செய்யும் போதும் பசுவின் முன்நெற்றி மற்றும் வால்பகுதியில் சந்தனம், குங்குமம் வைத்துது மலர் அணிவித்து வழிபட வேண்டும்.பசுவின் சாணமும் லட்சுமிஅம்சமாகும். அதிகாலையில் பசுஞ்சாணத்தை கொண்டு வீட்டு வாசலை மெழுகி கோலம் இட்டால் மகாலட்சுமி நம் வீடு தேடி வருவாள்.

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது பாற்கடலில் இருந்து நந்தாஇ பத்திரைஇ சுரபிஇ சுசீலைது சுமனை ஆகிய ஐந்து பசுக்கள் வெளிப்பட்டன என்று புராணங்கள் கூறுகிறது. பசுவின் கோமயம் எனப்படுகின்ற சாணம்து கோமூத்திரம், பால், தயிர், வெண்ணெய் ஆகிய ஐந்தும் புனிதமானவை. இவற்றைக் கொண்டு சிவபெருமானுக்கு செய்யப்படுகிற பஞ்சகவ்ய அபிகேம் மிகவும் விசேமானது. திருமகள் வாசம் செய்யும் இதன் பின்பாகத்தை தொட்டு வழிபட்டால் முன்ஜென்ம பாவங்கள் விலகும்.

கோமாதாவின் உடற் பகுதியில் உறையும் தெய்வங்களைப் பற்றியும்இ தேவகணங்களைப் பற்றியும் நமக்கு தெரிந்த சில இதெரியாத பல செய்திகளைத் தெரிந்துக் கொள்வோம்.

கோமாதாவின் முகம் மத்தியில் – சிவன்
வலக் கண் – சூரியன்
இடக் கண் – சந்திரன்
மூக்கு வலப்புறம் – ஆறுமுகக் கடவுள் முருகன்
மூக்கு இடப்புறம் – முழு முதற்கடவுள் விநாயகர்
காதுகள் – அஸ்வினி குமாரர்
கழுத்து மேல்புறம் – ராகு
கழுத்து கீழ்புறம் – கேது
கொண்டைப்பகுதி – நான்முகன் பிரம்மா
முன்கால்கள் மேல்புறம் – கலைமகள் சரஸ்வதி, துசங்கு சக்ரதாரி விஷ்ணுபகவான்
முன்வலக்கால் – பைரவர்
முன் இடக்கால் – சல்லின் செல்வர் ஹனுமார்
பின்னங்கால்கள் – பராசரர், விஷ்வாமித்திரர்
பின்னகால் மேல்பகுதி – நாரதர், வசிஷ்டர்
பிட்டம் கீழ்ப்புறம் – கங்கை
பிட்டம் மேல்புறம் – திருமகளான லக்ஷ்மி
முதுகுப்புறம்–பரத்வாஜர், குபேரர் வருணன்,அக்னி
வயிற்றுப்பகுதி – ஜனககுமாரர்கள் பூமாதேவி
வால் மேல் பகுதி – நாகராஜர்
வால் கீழ்ப்பகுதி – ஸ்ரீமானார்
வலக்கொம்பு – வீமன்



இடக்கொம்பு – இந்திரன்
முன்வலக்குளம்பு – விந்தியமலை
முன்இடக்குளம்பு – இமயமலை
பின் வலக்குளம்பு – மந்திரமலை
பின் இடக்குளம்பு – த்ரோணமலை
பால்மடி – அமுதக்கடல்

முப்பத்து முக்கோடிதேவர்களும், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிகளும், அஷ்டவசுக்களும், நவக்கிரகங்களும் ஆட்சி செய்யும் பசுவை காலையில் எழுந்ததும் தொழுவத்தில் காண்பது சுபசகுனமாக கருதப்படுகிறது.

கோ பூஜையை செய்வதால் சகல சம்பத்துக்களும், முற்பிறவியில் செய்த பாவங்கள் நீங்கிவிடும் என்பதால் கோமாதாவை வணங்கி பதினாறு செல்வத்தைப் பெற்று சிறப்புடன் வாழ்வோம்.

**சிவஶ்ரீ. நாதன் குருக்கள்**
**ஆஸ்ரேலியா**

# வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்



வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்.

வாசிப்பு என்பது எமது அன்றாட வாழ்வில் இன்றியமையாத ஒரு விடயமாகும். தற்போதைய நவீன உலகில் கைகளில் பணத்துடன் வெளியில் செல்வதை விட ஒவ்எவாரு நபரும் கைகளில் கையடக்க தொலைபேசியுடனே செல்வதை இனங்காணக்கூடியதாக உள்ளது. இப்போதெல்லாம் நாம் எமது மூளைக்கு வேலை கொடுப்பதை விட எமது கையடக்க தொலைபேசிக்கே வேலை கொடுக்கின்றோம். முன்னைய காலங்களில் பெரிய அறிஞர்கள் எல்லோரும் பலவகையான புத்தகங்களைக் கற்றுத்தான் பலவகையான கண்டுபிடிப்புக்களை முன்வைத்தனர். எனினும் தற்போதைய கால மக்கள் புத்தகங்களை வாசித்து அறிவைப் பெற்றுக்கொள்வதை விடுத்து, நவீன செல்லிடத்தொலைபேசி, தொலைக்காட்சிகளைப் பார்வையிட்டு அறிவை மழுங்கடிக்கின்றனர். எப்போது நாம் வாசிப்பை எமது தினசரி நடவடிக்கையாக முன்னெடுக்கின்றோமோ அன்றுதான் நாம் பூரண மனிதராக மாற முடியும்.

எப்போது, எமது சிந்தனையும் சொல்லும் ஒருங்கே சேர்த்து பல புத்தகங்களை வாசித்து அறிவை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் எம் மனதில் தோன்றுமானால் அன்றி தான் நாம் ஒரு பூரண மனிதராக உருவெடுக்க முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இன்று ஒவ்வொரு நகர்ப்புறங்களிலும் ஒவ்வொரு நூல் நிலையங்களை இனங்காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அங்கு சென்று வருபவர்கள் பெரும்பாலானோர் நூலகர்களே ஆவார். எதற்காக எமக்கு இவ்வளவு வசதிகள் கிடைத்தும் அவற்றைப் பயன்படுத்தாமல், அலட்சியப்படுத்துகின்றோம்? பல்வேறு பாடசாலைகளில் நூல்நிலையங்கள் நிறுவி, அதற்குப் பொறுப்பாக ஆசிரியரை நியமித்து வருகின்றது அரசாங்கம். எதற்காக? யாருக்காக? இவற்றையெல்லாம் செய்கின்றது அரசாங்கம் எல்லாம், மாணவர்களின் நன்மை கருதி என்பதை கட்டாயம் மாணவர்களாகிய நாம் அறிந்திருக்க வேண்டிய ஒரு விடயமாகும்.

பல பாடசாலைகளில் ஒரு பாடவேளையாக நூலகப்பாடவேளை காணப்படுகின்றது. பாடசாலை நிர்வாகம் அதனை மாணவர்களின் வாசிக்கும் திறனை மேம்படுத்துவதற்காகவே அமைத்துக்கொடுத்துள்ளது. ஆனால் ஒருசில ஆசிரியர்கள் அந்தப்பாட வேளையில் தங்கள் முழுத்திறமைகளையும் மாணவர்களுக்கு வழங்கிவிட்டுவிடுவதைப்போல் அப்பாடவேளைக்கு தங்கள் பாடங்களைக் கற்பிப்பது ஒரு மரபு முறையாக தொன்றுதொட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பாடசாலை நூலகம் அமைத்தது, பாடசாலை மாணவர்களின் புத்தகத்தை வாசிக்கும் திறனை மெருகூட்டி, மாணவர்களுக்கு தேடிப்பெற்றுக்கற்றுக் கொள்ளும் ஆளுமையை வளர்ப்பதற்காக மட்டுமே ஆனால் சில பாடசாலை ஆசிரியர்கள் நூலகம் அமைத்ததற்கான கருப்பொருளை விளங்கிக் கொள்வதில்லை.

பல புத்தகங்களைத் தேடிப் பெற்று அறிவை வளர்க்கும் நோக்கில் எப்போது செயற்படத் தொடங்குகின்றோமோ, அப்போதுதான் ஒரு பூரண மனிதன் உலகில் அவதரிப்பான். வாரத்தில் ஒரு நாளாவது நூலகத்திற்கு சென்று பல வகையான புத்தகங்களைத் தேடி வாசித்து நலம் பெற வேண்டும். பல ஞானிகள் கூறியுள்ளனர் மன அமைதியைப் பெற வேண்டுமாயின் முதலில் செல்ல வேண்டியது கோயிலுக்கு, இரண்டாவது செல்ல வேண்டியது நூலகத்திற்கும் என்று, அவர்கள் அதை அனுபவித்து உணர்ந்ததனாலேயே இவ்வாறாகக் கூறியுள்ளனர். ‘ஒரு நல்ல புத்தகம் ஒரு நல்ல நண்பன்’ என்று சும்மா வாகவா? பல கல்விமான்கள் கூறியுள்ளனர். உலகறி யும் உண்மை இதுவே. நமது வாழ்வில் முக்கிமான அங்கமாகத் திகழும் நபர் என்றால் நண்பர் என்றே கூறுவோம் ஆனால் அத்தகைய நண்பருக்கு ஒப்பாக ஒரு புத்தகத்தைக் கூறுவது என்பதனை நோக்கினால், எமது வாழ்வின் ஒரு அத்தியாவசியத் தேவையாக புத்தகமே காணப்படுகின்றது. எனவே ‘வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும்’ இதனை உணர்ந்து கொண்டால் வாழ்க்கையில் உயர்வடையலாம் என்ற பொன்மொழிக்கமைய வாழ்வோம்.

**மால்மருகன் ஹரிஜுஞ்சலி**
**யா/இந்து மகளிர் கல்லூரி**

காலைக்கதிர் Kalaikkathir

# கர்ப்பிணிகள், சிசுக்களின் தடுப்பூசிப் பதிவு டிஜிற்றல் மயமாக்குகின்றது இந்திய தேசம்



இந்தியாவில் இனி, குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களின் தடுப்பூசி அட்டைகளை கூடவே எடுத்துச் செல்வது, அடுத்த தடுப்பூசி போடும் நாள் மற்றும் பிற தொல்லைகளைக் கவனிக்க முடியாமல் தவிப்பது போன்ற விடயங்கள் விரைவில் கடந்த கால வியமாகிவிடும்.

கொரோனாத் தசுப்புக்கான Co - WIN தளத்தின் வெற்றிக்குப் பிறகு, வழக்கமான தடுப்பூசிகளுக்கான மின்னணு பதிவேட்டை அமைக்க இந்திய அரசாங்கம் இப்போது அதைப் பிரதியெடுத்துள்ளது.

U - WIN எனப் பெயரிடப்பட்ட, இந்தியாவின் உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டத்தை (UIP) டிஜிற்றல் மயமாக்கும் யோசனை , ஒவ்வொரு மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசத்தின் இரண்டு மாவட்டங்களில் சோதனை முறையில் தொடங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொருகர்ப்பிணிப்பெண்ணையும்பதிவுசெய்து தடுப்பூசி போடுவதற்கும், அவளது பிரசவ முடிவைப் பதிவு செய்வதற்கும், புதிதாகப் பிறந்த ஒவ்வொரு பிரசவத்தையும் பதிவு செய்வதற்கும், பிறப்பு அளவுகளை நிர்வகிப்பதற்கும் அதன்பிறகு அனைத்து தடுப்பூசி நிகழ்வுகளுக்கும் இந்த தளம் பயன்படுத்தப்படும் என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியாவின் கொவிட் – 19 தடுப்பூசி திட்டத்திற்கான டிஜிற்றல் முதுகெலும்பாக செயல்பட்ட Co - WIN ஐப் பிரதிபலிக்கும் தளம் ஜனவரி 11 அன்று 65 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

நோய்த்தடுப்புச் சேவைகள், தடுப்பூசி நிலை, பிரசவத்தின் தொடர் விளைவு, RI அமர்வுகளைத் திட்டமிடுதல் மற்றும் ஆன்டிஜென் வாரியான கவரேஜ் சம்பந்தமான அறிக்கைகள் போன்றவற்றுக்கான ஒற்றைத் தகவல் ஆதாரமாக U - WIN இருக்கப் போகிறது.

தடுப்பூசிக்கான தனிப்பட்ட கண்காணிப்பு, வரவிருக்கும் தடுப்பூசிகளுக்கான நினைவூட்டல்கள் மற்றும் கைவிடப்பட்டவர்களின் பின்தொடர்தல் ஆகியவற்றிற்காக அனைத்து கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் டிஜிற்றல் பதிவுகள் இருக்கும்.

சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் திட்ட மேலாளர்கள் சிறந்த திட்டமிடல் மற்றும் தடுப்பூசி விநியோகத்திற்காக வழக்கமான நோய்த்தடுப்பு அமர்வுகள் மற்றும் தடுப்பூசி கவரேஜ் பற்றிய நிகழ்நேர தரவை உருவாக்க முடியும் என்று ஒரு அதிகாரி விளக்கினார்.

கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு, ABHA ID (ஆயுஷ்மான் பாரத் ஹீத் கணக்கு) உடன் இணைக்கப்பட்ட தடுப்பூசி ஒப்புகை மற்றும் நோய்த் தடுப்பு அட்டை உருவாக்கப்படும் மற்றும் அனைத்து



மாநிலங்களும் மாவட்டங்களும் பயனாளிகளைக் கண்காணிக்கவும் தடுப்பூசி போடவும் பொதுவான தரவுத்தளத்தை அணுகலாம்.

தவிர, இந்தத் தகவல் மேடை மூலம் குடிமக்கள் அருகிலுள்ள வழக்கமான நோய்த்தடுப்பு அமர்வுகள் மற்றும் முன்பதிவுகளை சரிபார்க்கலாம் என்று ஓர் அதிகாரி கூறினார்.

65 மாவட்டங்களில் உள்ள வழிகாட்டிக்கான U



- WIN செயல்பாடுகள் மற்றும் நோக்கங்கள் குறித்து அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் உணர்த்தப்பட்டுள்ளன. மேலும் U-WIN இன் அனைத்து தொகுதிகளிலும் பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

இதன் மூலம் பதிவுகள் உட்பட முழு தடுப்பூசி முறையும் டிஜிற்றல் மயமாக்கப்படும், பயனாளிகளின் கண்காணிப்பை எளிதாக்கும்.

இந்தியாவின் உலகளாவிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் தடுப்பூசி பதிவுகள் தற்போது கைமுறையாக பராமரிக்கப்படுகின்றன. எனவே இது பௌதீக ரீதியான பதிவை வைத்திருப்பதில் உள்ள தொந்தரவை நீக்கும். இது அமர்வு திட்டமிடலை டிஜிற்றல் மயமாக்குவதற்கும், தடுப்பூசி நிலையை நிகழ்நேர அடிப்படையில் புதுப்பிப்பதற்கும் உதவும்.

பயனாளிகள் முன்கூட்டியே தடுப்பூசி போடுவதற்கான இடங்களை முன்பதிவு செய்ய முடியும். மேலும், இது பயனாளியின் இயக்கத்தை அனுமதிக்கும்.

“முழு நோய்த்தடுப்பு திட்டமும் டிஜிற்றல் மயமாக்கப்பட்டவுடன், பயனாளிகள் அந்த இடத்திலேயே சான்றிதழ்களைப் பெறுவார்கள். மேலும் அவர்கள் விரும்பினால் பதிவிறக்கம் செய்யலாம். இந்த சான்றிதழ்கள் டிஜி – லாக்கர்களில் சேமிக்கப்படும் – என்று ஓர் அதிகாரி விரிவாகக் கூறினார்.

ஒரு பயனுள்ள கண்காணிப்பு அமைப்பு, பயனுள்ள தலையீடுகளைத் திட்டமிடுவதற்கும் பயன்படுத்துவதற்கும் ஒரு சான்றுத் தளத்தை உருவாக்க உதவும்.

**(மூலம்:என்.டி.ரி.வி)**

# இலங்கைக்கு உதவ இந்தியா திடசங்கற்பம் கொண்டுள்ளது



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள அண்டை நாடான இலங்கையின் கடன் சுமையை குறைக்க, சர்வதேச நாணய நிதியத்தின் சாத்தியமான திட்டத்தின் ஒரு பகுதியாக, அந்நாட்டுக்கு உதவ இந்தியா உறுதி பூண்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்ற உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் இதே போன்ற உத்தரவாதங்களைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதிய செய்தித் தொடர்பாளர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிகாரிகள் உட்பட, போதுமான உத்தரவாதங்கள் பெறப்பட்டு, மீதமுள்ள தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன், இலங்கைக்கான நிதி – ஆதரவு திட்டமானது சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்காக முன்வைக்கப்படலாம், அது மிகவும் தேவையான நிதியுதவியைத் திறக்கும்.



# டிஜிட்டல் பொது உள்கட்டமைப்புக்கான இந்தியாவின் G20 பணிக்குழு ஸ்தாபிதம்

பொருளாதார மாற்றம், நிதிச் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுக்கான டிஜிற்றல் பொது உள்கட்டமைப்புக்கான இந்தியாவின் ஜி20 பணிக்குழுவை இந்திய மத்திய அரசு அமைத்துள்ளது. இந்த பணிக்குழுவுக்கு இந்தியாவின் ஜி20 ஷெர்பா அமிதாப் காந்த் மற்றும் இன்ஃபோசிஸ் தலைவர் நந்தன் நிலேகனி ஆகியோர் தலைமை தாங்குவார்கள்.

பணிக்குழு இந்தியாவின் ஜி20 தலைமைத்துவ நிகழ்ச்சி நிரல் மற்றும் டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பு, நிதி உள்ளடக்கம், டிஜிட்டல் அடையாளத்தை ஊக்குவித்தல், மேம்படுத்தப்பட்ட மற்றும் புதுமையான தொழில்நுட்ப அடிப்படையிலான சேவைகள், யுபிஐ போன்ற டிஜிட்டல் கட்டண முறைகள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்துவதை மேற்பார்வையிடும் மற்றும் எளிதாக்கும்.” – என்று கூறப்பட்டது.

ஜனவரி 21, 2023 அன்று பணிக்குழுவின் அமைப்புக்கான உத்தரவு நிதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.

உத்தரவின்படி, பணிக்குழு இந்தியாவின் டிஜிற்றல் உள்கட்டமைப்பின் விரிவான வரைபடத்தை (நிதி, சுகாதாரம், கல்வி, திறன், தரவு, வரிவிதிப்பு, டிஜிற்றல் வர்த்தகம், இயக்கம் மற்றும் அதற்கு அப்பால்) உருவாக்கி, முக்கிய டிஜிற்றல் உள்கட்டமைப்பை தேர்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. தனிப்பட்ட ஜி20 டிராக்குகளுக்குள் இந்தியா வழங்கியது.

இது முக்கியமான பகிரப்பட்ட விளைவுகளுக்கு உலகளாவிய ஒத்துழைப்பின் அவசியத்தை அடையாளம் காணும் (வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் சேர்ப்பதை விரைவுபடுத்துதல், நிதி நடவடிக்கைகளின் மேம்பட்ட இலக்கு, சந்தையில் போட்டியை மேம்படுத்துதல், தனிப்பட்ட தனியுரிமை மற்றும் பிறவற்றைப் பாதுகாத்தல்) – என்றும் கூறப்பட்டது.

**மூலம்: ‘த இண்டியன் எக்ஸ்பிரஸ்’**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.01.2023இல் வெளியிடப்பெற்றது.

# நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 09
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 12 வியாழக்கிழமை 26.01.2023 கதிர் 331

**தெற்கில் 3 விபத்துக்களில் நால்வர் சாவு; எழுவர் காயம்**

தெற்கில் மூன்று இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் நால்வர் உயிரிழந்துள்ளனர் எனவும், எழுவர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். 9

# ரணிலின் சர்வகட்சி மாநாட்டை மலையக கூட்டணி புறக்கணிப்பு

**எமது பற்றியும் பேசாவிட்டால் நாம் ஏன் பங்குபெற வேண்டும் என மனோ கணேசன் கேள்விக்கணை**



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய சர்வகட்சி மாநாட்டை தமிழ் முற்போக்குக்கூட்டணி புறக்கணித்துள்ளது.

எமது பிரச்சினைகள் பற்றியும் பேசப்படாவிட்டால் எதற்காக நாங்கள் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ள வேண்டும்? என்ற கேள்வியுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இது தொடர்பான நடத்தை தொடர்பில் அதிருப்தியை வெளியிட்டுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்பி. 2

## செல்வம், சித்தார்த்தனும் கூட்டத்தை புறக்கணிப்பு

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க இன்று மாலை கூட்டியுள்ள சர்வகட்சிக் கூட்டத்தில் தானும் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனும் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ரெலோ கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் 2

**கைப்பற்றப்பட்ட படகுகளின் வழக்குக்காக**

## இந்திய மீனவர் குழு யாழ்ப்பாணம் வந்தது

(ந.லோகதயாளன்)

இலங்கைகடற்பகுதிக்குள் அத்துமீறிய சமயங்களில் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் தடுத்து வைக் கப்பட் டுள்ள இந்தியப்படகுகளின்உரிமையாளர்கள் நீதி மன்ற 2

## பறவைகள் சரணாலயம் கோரைக்குளத்தில் திறப்பு

கோரைக்குளத்தில் அமைக்கப்பட்ட பறவைகள் சரணாலயம் இன்று மக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்பட்டது.

இலங்கைக்கு வலசை வரும் பறவைகள் ஆண்டுதோறும் மன்னார் மாவட்டத்தில் உள்ள கோரைக்குளம் பகுதிக்கு ஆயிரக்கணக்கில் வருகின்றன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தப் பறவைகளைநேரில்கண்டுகளிக்கும் வகையில்இந்தச்சரணாலயம் அமைக்கப்பட்டுள்ளது. 9

## பட்டப்பகலில் சிறைக்குள் பாலியல் துஷ்பிரயோகம்

**மரண தண்டனைக் கைதியின் மோசமான செயல்**

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனைக் கைதி ஒருவர் பட்டப்பகலில் மற்றுமொரு கைதியைக் கடுமையாகப் பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தில்பாதிக்கப்பட்ட கைதி சிறைச்சாலை வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கொலை குற்றச்சாட்டுக்காக 2



இந்தியாவின் 74ஆவது குடியரசதின நிகழ்வுகள் யாழ்பா ணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்திலும் இன்று இடம்பெற்றன. பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் துணைத் தூதர் நாட்டின் தேசியக் கொடியை ஏற்றி வைத்து பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியா தையையும் ஏற்றுக்கொண் டார். இந்திய குடியரசு தலை வருடைய உரையயும் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார்.

## ராஜபக்சக்களை விரட்டிய 9 வரிசையில் மார்ச் 9 ரணில் வீட்டுக்கு செல்லும் நாள்

**ஜே.வி.பி. சந்திரசேகரம் யாழ்ப்பாணத்தல் தெரிவிப்பு**

2022ஆம் ஆண்டு 9ஆம் திகதிகள் ராஜபக்சக்களை ஆட்சியில் இருந்து விரட்டும் நாள்களாக இருந்திருக்கின்றன, அந்த வரிசையில் எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி ரணில் ராஜபக்சவை நாட்டு மக்கள் விரட்டும் நாள் என்று தெரிவித்திருக்கிறார் ஜே.வி.பி. கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர்.

யாழ்ப்பாணத்தில் இன்று செய்தியாளர்களைச்சந்தித்த அவர்மேலும்தெரிவித்ததாவது:

கடந்த வருடம் ஏப்ரல் 9 ஜூன் 9 ஜூலை 9 ஆகிய திகதிகளில் ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பியதைப் போன்று எதிர்வரும் மார்ச் 9 தேர்தல் ரணில் ராஜபக்சாவை வீட்டுக்கு அனுப்பும் நாளாகும்.

ரணில் ராஜபக்ச அரசு தேர்தல் ஆணையாளர்களைப் பதவி விலகவைத்து தேர்தலை நிறுத்தும் நாடகத்தை முன்னெடுக்கின்றனர். அந்த வகையில் தேர்தல் ஆணைக்குழு அதிகார பதவியிலிருந்து 2

## 12 வருடங்களின் பின்னர் அரசியல் கைதி விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 12 வருடங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த அரசியல்கைதியான சிவசுப்பிரமணியம் தில்லைராஜ் இன்று மன்னார் மேல் நீதிமன்றத்தினால் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத நிலையில் 2

## ரணிலின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

தேசிய இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான உங்கள் அறிவிக்கப்பட்ட செயற்பாட்டில், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளுடனும், எமது மக்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் பேசுங்கள் என நாம் திரும்பத் திரும்ப ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் கோரினோம்.

எமது பிரச்சினைகள் பற்றி பேச உங்கள் தலைமையில் விசேட அதிகாரம் கொண்ட குழுவை நியமியுங்கள் எனவும் கோரியுள்ளோம்.

ஆனால், பகிரங்க மேடைகளில் இருந்து கூறப்பட்ட சில கருத்துக்களைத் தவிர, இது தொடர்பில் இதுவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரபூர்வமாக எதுவும் செய்யவில்லை.

ஈழத்தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் தொடர்புகளில் வடக்கு, கிழக்கு கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுகளை நாம் முழு மனதுடன் வரவேற்கின்றோம்.

ஆனால், மலையகத் தமிழரின் அரசியல் அபிலாஷைகள் இன்று தோட்ட வரம்புகளுக்கு வெளியே வளர்ந்து விட்டன என்பதை அனைத்துத் தரப்பினரும் அறிய வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினை என்பது இன்று வடக்கு, கிழக்கை மட்டும் மையம் கொண்டதல்ல. அது தேசியமயமானது என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஒரு எதிரணிக் கட்சியாக இருந்தாலும்கூட, தேசிய இன பிரச்சினை தொடர்பில் பேச்சுகளை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மக்கள் ஆணை இருக்கின்றதா என நாம் கேள்வி எழுப்பவில்லை. இந்நாட்டின் பிரதான பிரச்சினை தேசிய இன பிரச்சினை ஆகும்.

இந்நாட்டின் எந்தவொரு அரச தலைவருக்கும் இதற்காக விசேட மக்களாணை அவசியமில்லை என்பது எமது நிலைப்பாடு. இந்தக் கருத்தை நாம் நமது வடக்கு, கிழக்கு நட்பு கட்சிகளுடனும் பரிமாறிக் கொண்டுள்ளோம்.

ஆகவே, இன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இது தொடர்பான நடத்தையில் நாம் அதிருப்தியடைந்துள்ளோம் –என்றார்.

## இந்திய மீனவர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளிற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளனர். ஊர்காவற்றுறை நீதிமன் றில் இன்று இடம்பெறும் வழக்கில் முன்னி லையாவதற்காக பலாலி விமான நிலையம் ஊடாக
மீனவர்கள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகள் எனப் 10 பேர் வருகை தந்துள்ளனர்.

2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் இலங்கை எல்லைக்குள் நுழைந்தபோது கைப்பற்றப்பட்ட படகுகளின் உரிமையாளர்களே வந்துள்ளனர். அவர்கள் ஒரு வார காலம் யாழ்பாணத்தில் தங்கி நின்று தமது படகுகளுக்கான பராமரிப்புப் பணிகள் மற்றும் வழக்குசார் பணிகளை மேற் கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பட்டப் பகலில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரண தண்டனை விதிக்கப்பட்ட 52 வயதுடைய கைதி, ஊழல் குற்றச்சாட்டில் 6 வருட சிறைத்தண் டனை அனுபவித்து வரும் 29 வயதுடைய கைதியை கழிவறைக்குள் தள்ளி துஷ்பிரயோகத் துக்கு உட்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரிகள் பொரளை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்தத் துஷ்பிரயோக சம்பவத்தை, 45 வய தான கைதி ஒருவர் நேரில் பார்த்தார் என்று வாக்குமூலம் வழங்கியுள்ளார் என இது தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வரும் பொர ளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து கைதி களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

பொரளை பொலிஸ் நிலையக் கட்டளைத் தளபதி பிரதம பொலிஸ் பரிசோதகர் ஜானக பிய தர்ஷன விதானகேவின் பணிப்புரையின் பேரில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்சக்களை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.எம்.எஸ்.சாள்ஸ் விலகியிருக்கிறார். தேர்தல் ஆணையகம் தேர்தலை நடத்துவதற்கான சுயாதீனமான அமைப்பு. தேர்தல் மக்களின் உரிமை. ஆகவே சாள்ஸ் அம்மையார் பதவி விலகியமை மக்களுக்குச் செய்யும் துரோகம். அவரத பதவி விலகலைத் தூண்டியவர்கள் வேறு யாருமல்லர், நாட்டு மக்களின் உரிமை களை அடகு வைத்த நாட்டு வளங்களை விற்றுத் தீர்த்த ரணில் மற்றும் ராஜபக்சாக்கள்தான்

தேர்தலை பிற்போடுவதற்குச் சூழ்ச்சி செய்யும் ரணில் ராஜபக்சக்கள் உட்பட அனைவருக்கும் எதிராக மக்கள் திரள வேண்டும் என அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் என தெரிவித்தார்.

## செல்வம், சித்தார்த்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித் தார்.மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் இன்று காலை செய்தியாளர்களைச் சந்தித்த அவர், ஜனாதிபதி ஏற்கனவே தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற் றப்படும் வரை எந்தவொரு சர்வகட்சிக் கூட்டத்தில் தாம் பங்கேற்கமாட்டார் என்றும் தெரிவித்தார்.

"ஜனாதிபதி தலைமையில் இன்று நடைபெறும் சர்வகட் சிக் கூட்டத்தில் நானும் சித்தார்த்தனும் கலந்துகொள்ளவில்லை. காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுவிப்பு என்பன தொடர்பில் ஜனாதிபதி ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகள் சரியாக நிறைவேற்றப்படாத காரணத்தால் இன்றையகூட்டத்தில் நாங்கள் கலந்துகொள்ளவில்லை" – என்றார் அவர்.

தமிழ்க் கட்சிகள் கேட்டுக்கொண்ட விடயங் களை ஜனாதிபதி நிறைவேற்றினாரானால் எதி ர்காலத்தில் அவர் அழைக்கும் கூட்டங்களில் தாங்கள் பங்குபற்றுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

பொங்கல் தினத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்து படையினர் வசம் உள்ள 108 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தி ருந்தார், ஆனால் அது நடக்கவில்லை, எனவே தான் எங்களுடைய எல்லாக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்போது நாம் பேச்சுக்கு வரு வோம் என்று சொல்கிறோம் – எனவும் செல்வம் மேலும் தெரிவித்தார்..

## 12 வருடங்களின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரபராதி என விடுதலை செய்யப்பட்டார்.

2011ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் 13 ஆம் தி கதி யாழ்பாணத்தில் மானிப்பாய் பகுதியில் தில் லைராஜாவுக்கு சொந்தமான மரக்காலை ஒன்றில் வைத்து அவர் கைது செய்யப்படிருந்தார். அவருக்கு எதிரான வழக்கு இன்று மன்னார் மேல் நீதி மன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்டபோது அவரை விடுவித்து உத்தரவிட்டார் நீதிபதி தில் லைராஜ்.

"நான் எந்த குற்றமும் செய்யாது 12 வருடங்கள் சிறையில் இருந்திருக்கின்றேன். என்னைப் போன்று 25 வருடங்களுக்கு மேலாக அரசியல் கைதிகளாக சிறைகளில் வாடும் பலர் இருக் கிறார்கள். அவர்களையும் விரைவில் விடுதலை செய்யவேண்டும்" என்று விடுதலையான பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தில்லைராஜ் தெரிவித்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நியாயமான எதிர்வினை

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்றைய தினம் கூட்டிய சர்வகட்சிக் கூட்டத்தில் தமிழ் முற்போக்குக்கூட்டணி பங்கேற்காமல் புறக்கணித்திருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் மலையக மக்களின் பிரச்சினையும்கூட ஆராயப்படாவிட்டால் எதற்காக நாங்கள் பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளவேண்டும் என்று கேள்வி எழுப்பியே கூட்டத்தைப் புறக்கணித்திருக்கிறார் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

பிரிட்டிஷ் அடக்குமுறைக் காலத்திலும் சரி, அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய கடந்த 75 வருட காலத்திலும் சரி இலங்கை என்கிற நாட்டின் முதுகெலும்பாக இருந்து உழைத்தவர்கள் மலையகத் தமிழ் மக்கள். அவர்களின் உழைப்பை உறிஞ்சியே கொழும்பும் நாடும் இத்தனை காலம் பொருளாதார நெருக்கடி இன்றி கடந்து வந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

அப்படித் தமது உதிரத்தை உழைப்பாகத் தந்து நாட்டைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்திவிட்ட மக்களை கடந்த 75 ஆண்டுகளாக மாறிமாறி வந்த ஆட்சியாளர்கள் எந்தக் கரிசனையோடும் நடத்தவில்லை. அவர்கள் மூன்று நேரம் முழுமையாகப் பசியாற முடியாத நிலையில்தான் அவர்களை வைத்திருக்கிறார்கள். இந்த நிலையை கடந்துவிடவேண்டும் என்கிற வேகத்தோடு இன்று மலையக மக்கள் தோட்டங்களைத் தாண்டிப் பயணப்படத் தொடங்கிவிட்டார்கள்.

இந்த நாட்டில் ஏனைய அனைவருக்கும் குறிப்பாகச் சிங்களவர்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து உரிமைகளும் தமக்கும் வேண்டும் என்று கேட்பதற்கு அவர்களுக்கு அனைத்து தகுதிகளும் உரிமைகளும் இருக்கின்றன. ஏனெனில் சிங்களவர்களுக்குமாக கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாக அந்நியச் செலாவணியை உழைத்துத்தந்தவர்கள் அவர்கள்தான்.

இன்று டொலர் கையிருப்பு இல்லாது பொருளாதார நலிவை நாடு சந்தித்திருக்கும் தருணத்தில் மலையகத் தொழிலாளர்களின் உழைப்பு எவ்வளவு பெரியது என்று அனைவரும் புரிந்துகொண்டிருக்கவேண்டும். அதுமட்டுமல்ல மலையக மக்களைக் கொண்டாடித் தீர்த்திருக்கவேண்டும். அதற்குப் பதிலாக எங்கள் பிரச்சினையையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேளுங்கள் என்று கையேந்தும் நிலையில்தான் அவர்களை இந்த அரசு வைத்துக்கொண்டிருக்கிறது.

அதனால் மனோ கணேசனுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அறச் சீற்றம் முற்றிலும் நியாயமானதே. அவர் கூறுவதைப் போலவே இனப்பிரச்சினை என்பது வடக்கு கிழக்கை மட்டும் மையப்படுத்தியதல்ல, அது தேசியமயமானது என்பதை ஆட்சியாளர்கள் புரந்துகொண்டு மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது குறித்து உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அதற்கான மலையக மக்களின் அனைத்துச் செயற்பாடுகளிலும் வடக்கு கிழக்குத் தமிழ் மக்களும் தோளோடு தோள் நின்று உழைக்க வேண்டியது வரலாற்றுக் கடமை.

## சுதந்திர தின நிகழ்வில் பங்கேற்க இலங்கை வருகின்றார் பட்ரிசியா



இலங்கையின் 75 ஆவது தேசிய சுதந்திர தின விழாவில் கலந்துகொள்வதற்காகப் பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று பொதுநலவாய செயலகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொதுநலவாய செயலாளர் நாயகத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கைக்கான ஐந்து நாள் பயணத்தில், அவர் ஜனாதிபதியை மரியாதை நிமிர்த்தமாகச் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் பெப்ரவரி 3 திகதியன்று, கடல்சார் சிந்தனைக் களஞ்சியமான புவிசார் அரசியல் வரைபடத்தில் அவர் விரிவுரை ஆற்றவுள்ளார்.

பொதுநலவாய செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லாண்ட் எதிர்வரும் முதலாம் திகதி இலங்கைக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதுடன் பெப்ரவரி 5 ஆம் திகதி நாட்டில் இருந்து புறப்படவுள்ளார்.

## வேலைவாய்ப்பு, முதலீடுகளை பெறுவதற்கு சவூதிக்கான விஜயம் சாதகமாக அமையும்

### காதர் மஸ்தான் தெரிவிப்பு



சவூதி நாட்டுக்கு 5 நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட குழுவினர் அங்கு பலதரப்பு பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றனர். வேலைவாய்ப்பு, முதலீடுகளை பெறுவதற்கு சவூதிக்கான விஜயம் சாதகமாக அமைகிறது.

இந்த விஜயம் தொடர்பாக ஊடகங்களுக்குகருத்துதெரிவிக்கையிலேயே காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்பு மற்றும் முதலீடுகளை பெற்றுக் கொள்வது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பேச்சுகளை நடத்தி வருகிறோம். இந்தப் பேச்சு சாதகமாக அமையும்.

எமது நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கு வெளிநாட்டு உதவிகள் முக்கியமானதாகும். நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை விருத்தி செய்யவும் சம்பந்தப்பட்ட தரப்பினிடம் தொடர்ந்தும் பேச்சில் ஈடுபட்டு வருகிறோம். – என்றார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையில் சவூதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்த தூதுக்குழுவினர், இந்த விஜயத்தின்போது இருநாட்டு உறவுகள் மற்றும் பரஸ்பர வர்த்தகமம்பாடு தொடர்பாக சவூதி அரச உயர் மட்டத்துடன் பேச்சில் ஈடுபடுவதுடன், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும் விஜயங்களைமேற்கொள்ள உள்ளனர்.

## மனைவி வெளிநாடு செல்வதை தடுக்க மகனுக்கு விஷம் கொடுத்தார் தந்தை!

பொலன்னறுவையில் மனைவி வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்காக 12 வயது மகனுக்கு விஷம் கொடுத்த தந்தை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலன்னறுவை உள்ள கிராமம் ஒன்றை சேர்ந்த 48 வயதுடைய தந்தையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது 12 வயது மகனுக்கு விஷம் கொடுத்ததையடுத்து, மகன் பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த தந்தைக்கும், தாய்க்கும் இடையே ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக சில காலமாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர்.

மகன் தனது தந்தையின் வீட்டுக்குச் சென்றபோது, மகனுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளதுடன், மனைவியை வீட்டுக்கு அழைத்து வருவதற்காக மகனுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

தந்தை கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர் மகனுக்கு தந்தை விஷம் கொடுத்த செய்தி அறிந்த தாய் தந்தை வாழ்ந்த வீட்டுக்கு வந்துள்ளார்.

பின்னர், விஷம் அருந்திய மகனை வைத்தியசாலையில் சேர்க்க தாய் நடவடிக்கை எடுத்துள்ளார். மகனிடம் வாக்கு மூலம் பதிவு செய்யும் போது, தாய் வெளிநாடு செல்வதை தடுக்கும் வகையில் தந்தை விஷம் குடிக்குமாறு மகனுக்கு அழுத்தம் கொடுத்தார் என அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.



## திருமணத்திற்கு முன் மொட்டை கென்யாவில் விநோதப் பழக்கம்

ஆபிரிக்க நாடான கென்யாவில் உள்ள பழங்குடியினங்களில் ஒன்றில் திருமணத்திற்கு முன்னர் பெண்கள் மொட்டையடித்துக்கொள்கிறார்கள்.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் மட்டுமல்லாது உலகிலுள்ள அனைத்து மதங்கள், பல்வேறு பழங்குடியினங்களின் திருமணத்தில் பல்வேறு சடங்குகளும் பின்பற்றப்படுகின்றன. அதன் மீது அவரவர்களுக்குப் பல நம்பிக்கைகளும் இருக்கும். அந்த வகையில், ஆப்பிரிக்க பழங்குடியினரால் பின்பற்றப்படும் திருமணச் சடங்கு ஒன்று பலரை ஆச்சர்யப்படுத்தியிருக்கிறது.

அதாவது, இந்த ஆப்பிரிக்கப் பழங்குடியினப் பெண்கள் திருமணத்துக்கு மொட்டையடிக்கவேண்டும். பாரம்பர்ய மிக்கதாகக் கூறப்படும் இத்தகைய திருமணச் சடங்கு, கென்யாவின் போரானா பழங்குடியினரால் பின்பற்றப்படுகிறது. மணப்பெண் திருமணத்தின்போது மொட்டையடித்துக் கொண்டால், மணமகனுக்கு மிக அடர்த்தியான நீண்ட முடி இருக்கும் என்கிறார்கள். அதேசமயம் ஆண்கள், தங்களுக்கு அடர்த்தியான முடி வளர, நெய் அல்லது வெண்ணெய் தடவி தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் ஆர்வமாக இருக்கின்றனர்.

எத்தியோப்பியா, சோமாலியாவிலுள்ள பழங்குடியினில் பெண்கள் ஒளிப்படம் எடுத்துக்கொள்வதற்கு அனுமதியில்லை. இதற்கும் அவர்கள், ஒளிப்படம் எடுத்துக்கொள்ளும் பெண்கள் குருதிச் சோகை குறைபாட்டால் பாதிக்கப்படுகிறாரகள் என்று நம்புகிறார்கள்.

## மெதுவாகச் சாப்பிட்டதற்கு அபராதம் 40 ஆயிரம் ரூபா

இங்கிலாந்தில் உள்ள மெக்டொனால்ட் உணவகத்தில் மெதுவாகச் சாப்பிட்டதற்காக, நபருக்கு 40,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட சம்பவம் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் நியூமார்க்கெட் சாலையில் அமைந்துள்ள மெக்டொனால்டு கடைக்கு, பூர் மெஃப்தா என்பவர் சென்றுள்ளார். வேலை முடித்துவிட்டு சகோதரரைக் காண வந்தவர், நல்ல ஒரு சாப்பாடு சாப்பிடலாம் எனத் தன்னுடைய சகோதரரையும் அழைத்துக் கொண்டு கடைக்குச் சென்றுள்ளார். காரை இக்கடைக்குச் சொந்தமான பார்க்கிங்கில் விட்டுவிட்டு இருவரும் சாப்பிட்டுள்ளனர்.

நன்றாக சாப்பிட்டுவிட்டு வீட்டிற்குச் சென்றவருக்கு ஒரு நோட்டீஸ் வந்துள்ளது. அதில் மெக்டொனால்டில் காரை நீண்ட நேரம் நிறுத்தியதால், அபராதம் விதிக்கப்படுவதாகத் தனியார் பார்க்கிங் நிறுவனத்திடமிருந்து நோட்டீஸ் வந்துள்ளது.

அதைப் பார்த்தவர் அதிர்ந்து போயுள்ளார். இந்த




சம்பவம் குறித்து தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், “2023 ஜனவரி 4 மற்றும் 6 ஆகிய தேதிகளில், மெக்டொனால்டு நியூ மார்க்கெட் சாலையில் பார்க்கிங் செய்ததற்காக இந்திய மதிப்பில் 40,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மெக்டொனால்டு வாடிக்கையாளர்கள் 90 நிமிடங்கள் மட்டுமே பார்க்கிங் செய்ய முடியும். இந்த நிமிடங்களை மீறி அதிகநேரம் கார் பார்க்கிங் செய்யப்பட்டிருந்ததால், அபராதம் விதிக்கப்படுகிறது என இருந்தது.

மெக்டொனால்டின் உள்ளே 90 நிமிடங்கள் மட்டுமே அமர்ந்து உணவு உண்டு செல்ல வேண்டும் என்ற எந்த குறிப்புகளுமே இல்லை. நாங்கள் சற்று அதிக உணவை ஆர்டர் செய்திருந்தோம். எப்படி வேகமாக சாப்பிட முடியும். இதுவரை மெக்டொனால்டில் இருந்து, நான் பெற்றதிலேயே மிக விலை உயர்ந்தது இதுதான்" எனத் தெரிவித்துள்ளார்

### ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைனுக்கு

# அதிநவீன பீரங்கிகளை வழங்க ஜெர்மனி தயார்

ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட, தங்களது சக்திவாய்ந்த லெப்பாட்-2 பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப ஜொமனி முடிவு செய்துள்ளது.

இதுகுறித்துஜொமனிஅரசுவெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உக்ரைனுக்கு லெப்பாட்-2 பீரங்களை அனுப்ப முடிவு செய்துள்ளோம். முதல் கட்டமாக, ஜொமனி படையினர் வசம் இருக்கும் 14லெப்பாட்2-ஏரேகபீரங்கிகள்அனுப்பப்படும்.

உக்ரைனுக்கு ஜொமனியும், கூட்டணி நாடுகளும் இதுபோன்ற மொத்தம் 88 பீரங்களை அனுப்ப முடிவு செய்துள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பொலினில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளாகளிடம் பேசிய ஜொமனி பிரதமா ஓலாஃப் ாஸ்ஸ், ரஷியாவுடனான போரில் உக்ரைனுக்கு தங்களால் இயன்ற அனைத்து உதவிகளையும் அளிக்கும் தங்களது கொள்கையின் அடிப்படையிலேயே, அந்த நாட்டுக்கு லெப்பாட்-2 பீரங்கிகளை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் தங்களது கூட்டணி நாடுகளுடன் ஒருங்கிணைந்து மட்டுமே செயல்படுவதாக அவா கூறினாா். உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே கடந்த ஒரு வருட காலமாகப் போர் நடந்துவரும் நிலையில் ரஷ்யாவுக்கு எதிராக சண்டையிடுவதற்கு தங்களது அதிநவீன லெப்பாட்-2 பீரங்கிகளை மேற்கத்தியநாடுகள் அளித்துஉதவவேண்டும் என்று உக்ரைன் அதிபா வொலோதிமீா ஸெலென்ஸ்கி தொடாந்து வலியுறுத்தி வருகிறாா்.

எனினும், ஜொமனியால் தயாரிக்கப்படும் அந்த பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப அந்த நாடு தொடாந்து தயக்கம் காட்டி வந்தது. மற்ற மேற்கத்திய நாடுகளுக்கு லெப்பாட்-2 பீரங்கிகளை ஜொமனி ஏற்றுமதி செய்திருந்தாலும், தங்களது அனுமதியில்லாமல் அவற்றை பிற நாடுகளுக்கு மறு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று ஜொமனி நிபந்தனை விதித்துள்ளது.

இதனால் உக்ரைனுக்கு லெப்பாட்-2 பீரங்கிகள் அனுப்பப்படும் விவகாரத்தில் இழுபறி நீடித்து வந்தது.

இந்தச் சூழலில், உக்ரைனுக்கு அந்த வகை பீரங்கிகளை போலந்து அனுப்பினால் அதற்கு தாங்கள் தடை விதிக்கப்போவதில்லை என்று ஜொமனி வெளியுறவுத் துறை அமைச்சா அன்னலினா பேயாபக் ஞாயிற்றுக்கிழமை கூறினாா்.

அதன் தொடாச்சியாக, போலந்து பிரதமா மாடேவுஸ் மோரவியெஸ்கியும் ஜொமனியிடமிருந்து வாங்கியுள்ள லெப்பாட்-2 பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்ப ஜொமனி அனுமதிக்காவிட்டாலும், பிற நட்பு நாடுகளுடன் இணைந்து அந்த பீரங்கிகளை உக்ரைனுக்கு அனுப்பவிருப்பதாக திட்டவட்டமாகத் தெரிவித்தாா்.

இந்தச் சூழலில், தங்களது எம்1 அப்ரம்ஸ் ரகபீரங்கிகளைஉக்ரைனுக்குஅனுப்புவதற்காக அந்த நாட்டுடன் பூர்வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனா.

அதையடுத்து, உக்ரைனுக்கு தங்களது லெப்பாட்-2 பீரங்கிகளை அனுப்ப முடிவு செய்துள்ளதாக ஜொமனியும் அறிவித்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## நியூஸி. பிரதமராக கிறிஸ் பதவியேற்றார்

நியூஸிலாந்தின் புதிய பிரதமராக, இதுவரை அந்த நாட்டு கல்வித் துறை அமைச்சராக இருந்த கிறிஸ் ஹிப்கின்ஸ் புதன்கிழமை பதவியேற்றார்.

44 வயதாகும் அவா மட்டுமே, பிரதமா ஜெசிந்தா ஆர்டனின் திடீா ராஜிநாமா அறிவிப்புக்குப் பிறகு அடுத்த பிரதமரைத் தோ்ந்தெடுப்பதற்காக கடந்த சனிக்கிழமை நடைஆவது பிரதமராக தற்போது பதவியேற்றுள்ளாா்.

முன்னதாக, கடந்த 2017ஆம் ஆண்டியிலிருந்து நியூஸிலாந்தின் பிரதமராக இருந்து வரும் ஜெசிந்தா ஆர்டன், தனது பதவியை ராஜிநாமா செய்வதாக கடந்த வாரம் திடீரென அறிவித்து நாட்டு மக்களை அதிர்ச்சியடையச் செய்தார்.

நாட்டின் மிக உயாந்த பிரதமர் பதவியை வகிப்பதற்கான சூழல் தனக்கு இனிமேல் இல்லை என்பதை உணாந்ததால் அந்தப் பதவியிலிருந்து விலகத் தான் முடிவு செய்தாா் என்று ஜெசிந்தா கூறினாா். வலதுசாரி ஆதரவாளாகளால் ஜெசிந்தா ஆர்டனுக்கு கடந்த சில ஆண்டுகளாகவே மறைமுக திா்ப்பு அதிகரித்து வந்ததாகக் கூறப்படும் நிலையில் யாரும் எதிர் பாராத வகையில் அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டாா்.

## ஜெயலலிதாவின் பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பொருட்கள் பகிரங்கமாக ஏலம் விடப்படவுள்ளன.

சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரில் ஜெயலலிதா காலமானார். சசிகலா உட்பட 3 பேரும் 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த பின்னர் வெளியே வந்தனர். இந்த நிலையில், சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவிடமிருந்து பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

நரசிம்ம மூர்த்தி என்பவர், ஜெயலலிதாவிடமிருந்து பறிமுதல் செய்த பொருள்களை ஏலம் விடக்கோரி பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு வழக்கு தொடர்ந்தார். இந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதையடுத்து, கர்நாடக நீதிமன்றத்தில் நரசிம்ம மூர்த்தி மேல்முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரித்து தீர்ப்பளித்திருக்கும் நீதிபதி, வழக்கறிஞரை நியமித்து ஜெயலலிதாவின் அனைத்து சொத்துகளையும் ஏலம்விட நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார். அதன்படி, 468 வகையான வைரம், ரூபி, மரகதம், முத்து, ரத்தினம் உள்ளிட்ட விலை உயர்ந்த கற்கள், தங்கநகைகள், 700 கிலோ வெள்ளிப்பொருள்கள், ரூ.11,344 மதிப்பிலான புடைவைகள், 91 கைக்கடிகாரங்கள், 27 சுவர் கடிகாரங்கள், 44 குளிர்சாதன இயந்திரங்கள், 86 மின்விசிறிகள், 146 அலங்கார நாற்காலிகள், 81 தொங்கு விளக்குகள், 20 சோபா செட்கள், 250 சால்வைகள், 12 குளிர்பதன பெட்டிகள், 10 தொலைக் காட்சிப்பெட்டிகள், 8 சி.வி.ஆர் கருவிகள், 140 வீடியோ கேசட்டுகள், 1 வீடியோ கேமரா, 4 வீடியோ பிளேயர்கள், 1,040 வீடியோ கேசட்கள், 24 டேப் ரெக்கார்டர்கள், 3 இரும்பு லாக்கர்கள், 33 தொலைபேசிகள் ஆகியவை ஏலத்தில் விடப்பட இருக்கின்றன.

ஏலம்விடும் பணிகளை மேற்கொள்ள, கர்நாடக அரசு ஒரு சிறப்பு வழக்கறிஞரை நியமிக்க வேண்டும் என்றும் பெங்களூரு சிவில் நீதிமன்றம், தனது உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறது.



# கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை முடக்கவே காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் அரங்கேறின

## சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

இலங்கை அரசாங்கங்கள் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை முடக்குவதற்கானதொரு கருவியாக வலிந்து காணாமலாக்குதலை பயன்படுத்தி வந்தமைக்கான நீண்டகால வரலாறு உண்டு.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் உயிர் வாழ்வதற்கான உரிமை, சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, விடுதலை மற்றும் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கு உட்படுவதற்கான உரிமை உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

அரசியல் ரீதியான தன்முனைப்பின்றி, இந்த மோசமான நடைமுறையை முடிவுக்கு கொண்டுவர முடியாது என்று சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வலிந்து காணாமலாக்கப்பட்டு செவ்வாய்க்கிழமையுடன் 13 வருடங்கள் பூர்த்தியடைந்திருக்கும் நிலையில், அதன் பொருட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

பாதுகாப்பு படையினரால் நீங்கள் தடுத்துவைக்கப்படுவதை அல்லது காணாமலாக்கப்படுவதை கற்பனை செய்து பாருங்கள்.

நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள்? நீங்கள் உயிருடன் இருக்கின்றீர்களா அல்லது உயிரிழந்துவிட்டீர்களா என்பது பற்றி யாரும் அறியாதவண்ணம் நீங்கள் தடுத்துவைக்கப்படுவதை கற்பனை செய்து பாருங்கள்.

நீங்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதை பாதுகாப்புத் தரப்பினர் மறுப்பதுடன், நீங்கள் இருக்கும் இடத்தை இரகசியமாக வைத்திருக்கின்றார்கள்.

உங்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. நீங்கள் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றீர்களா? உங்களுக்கு அவசியமான உணவு, மருந்து என்பன வழங்கப்படுகின்றனவா? அல்லது அவர்கள் உங்களை ஏற்கனவே படுகொலை செய்துவிட்டார்களா? என்பது தொடர்பாக உங்களது அன்புக்குரியவர்களுக்கு எதுவும் தெரியவில்லை.

பல வருடங்கள் கடந்தும் உங்களுடைய விதியும், நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள் என்பதும் யாருக்குமே தெரியவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்ட நபர்களின் பட்டியலில் நீங்களும் மற்றுமொரு நபராக உள்ளடங்குகின்றீர்கள்.

13 வருடங்களுக்கு முன்னர், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவுக்கு நேர்ந்தது இதுவே.

பலவருடங்கள் கடந்துவிட்டபோதிலும் இன்னமும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

இந்த வழக்கில் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தொடர்ந்து போராடி வருகின்றபோதிலும், தற்போது வரை எந்தவொரு குற்றவாளியும் பொறுப்புக்கூறச் செய்யப்படவில்லை.

பிரகீத் எக்னெலிகொட ஓர் ஊடகவியலாளர் என்ற ரீதியில் அவரது தொழிலுக்காக மாத்திரம் இலக்கு வைக்கப்படவில்லை. மாறாக, ஊழல் மோசடிகளுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளை வெளிப்படையாக விமர்சித்தமைக்காகவும் அவர் இலக்கு வைக்கப்பட்டார்.

இலங்கை அரசாங்கங்கள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்கானதொரு கருவியாக வலிந்து காணாமலாக்குதலை பயன்படுத்தி வந்தமைக்கான நீண்டகால வரலாறு உண்டு.

வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுக்குழுவின் முன் நிலுவையில் உள்ள பட்டியலை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் பதிவான இரண்டாவது நாடாக இலங்கை இருக்கின்றது.

கடந்த 1980 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் 60,000 - 100,000 வரையிலான வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கும் என சர்வதேச மன்னிப்புச் சபை மதிப்பிட்டுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் உயிர் வாழ்வதற்கான உரிமை, சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, விடுதலை மற்றும் நியாயமான வழக்கு விசாரணைகளுக்கு உட்படுவதற்கான உரிமை உள்ளிட்ட பல்வேறு மனித உரிமைகள் மீறப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் அரசியல் ரீதியான முனைப்பின்றி, இந்த மோசமான நடைமுறையை முடிவுக்கு கொண்டுவர முடியாது என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# நாட்டில் சட்டத்தின் ஆட்சி சமமாக இருக்க வேண்டும்!

## அநுரகுமார இடித்துரைப்பு



பொருளாதார பிரச்சினைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டுமெனில், மக்களிடையே முதலில் ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டும் என ஜே.வி.பியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க திய அரசமைப்பு ஸ்தாபிக்கப்பட வேண்டும் என ஒரு தரப்பினர் கூறுகிறார்கள்.

இன்னொரு தரப்பினர், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாது செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட கதிரையின் பாரத்தை சுமக்கும் அளவுக்கு எமது தலைவர்களின் மனதளவில் வலிமையானவர்கள் கிடையாது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாத, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கட்சி தாவ முடியாத, அமைச்சர்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்திய, மனித உரிமையை வலுப்படுத்தக்கூடிய, சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு முழு உரிமையுடன் வாழக்கூடிய புதிய அரசமைப்பொன்று ஸ்தாபிக்கப்பட்டே ஆக வேண்டும்.

ஒரு நாடு வளமடைய வேண்டுமெனில் சட்டத்தின் ஆட்சி அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும்.

ஆனால், இன்று எமது நாட்டிலோ பணம் உள்ளவர்களுக்கு ஒரு சட்டமும் பணம் இல்லாதவர்களுக்கு இன்னொரு சட்டமும் தான் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இப்படியாக ஒரு நாட்டால் ஒருபோதும் முன்னேற முடியாது. நீதிமன்றக் கட்டமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும். நீதிமன்றங்களின் மீது நம்பிக்கை இல்லாது போனால், மக்களின் உரிமைகள் மீறப்பட்டுவிடும். இந்த அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும்.

இன்று உலக நாடுகளாகட்டும், ஐ.நா., ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களாகட்டும், அனைத்துமே இலங்கை தொடர்பாக அதிருப்தியையே வெளிப்படுத்தி யுள்ளன. சிங்கள- தமிழ்- முஸ்லிம். பறங் கியர் என அனைவரும் சமாதானமாக வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்த வேண்டும். மொழி, மத உரிமை முழுமையாகப் பாதுகாக்கப்பட்ட ஒரு நாடாக மாற வேண்டும். மக்களிடத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்தாமல், எம்மால் ஒருபோதும் பொருளாதாரத்தையோ நாட்டையோ முன்னேற்ற முடியாது.- எனத் தெரிவித்துள்ளார்.

# நிலக்கரி வாங்க இரண்டு வங்கிகளுடன் பேச்சு!

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கான நிலக்கரி இறக்குமதிக்கு நிதியளிப்பதற்காக இரண்டு அரச வங்கிகளிடம் கடன் பெறுவதற்கு பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது.

அடுத்த மூன்று மாதங்களில் 21 கப்பல்கள் நிலக்கரி இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனவரி வரும் என எதிர்பார்க்கப்பட்ட 7 நிலக்கரி கப்பல்களில் 5 கப்பல்கள் வந்துள்ளன என்றும் மீதமுள்ள இரண்டு கப்பல்கள் இந்த மாதத்துக்குள் வரும் என்றும் அவர் கூறினார். வங்கிகளில் இருந்து பெறப்படும் கடன் வசதிகளின் அளவுக்கேற்ப இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

இதனைக் கொண்டு குறைந்தளவிலான மின்சார துணிடப்போடு மின்சாரம் வழங்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# எரிபொருளைச் சிக்கனப்படுத்த சைக்கிளில் பயணிக்கும் எம்.பி!

## தேர்தல் நாடகமா என மக்கள் சந்தேகம்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் சைக்கிளில் தனது அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்கிறார்.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையால் எரிபொருளை பெறுவதில் பெரும் இடர்பாடுகள் காணப்படுகின்றனஃ கியு.ஆர். முறையில் எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது.

எனவே எரிபொருளை சிக்கனப் படுத்தும் முகமாக தான் சைக்கிளில் பயணம் செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொகுசு வாகனங்களிலும் மோட்டார் சைக்கிளிலும் பயணம் செய்யும் நிலையில் செல்வராசா கஜேந்திரன் சைக்கிளில் தனது அன்றாட செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை தேர்தல்கால அரசியல் நாடகமா என மக்களைச் சந்தேகிக்க வைத்துள்ளது.

# அமைச்சரவை மறுசீரமைப்பில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டமை நியாயமான ஒன்றே!

## ரோஹித அபேகுணவர்தன கூறுகிறார்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் நான். ஆகவே, அமைச்சரவை மறுசீரமைப்பில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை நியாயமானதே.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியாக செயற்பட தயாராகவுள்ளோம். சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அரசியல் கொள்கைகளை மாற்றிக்கொள்ள மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போட ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்பதாக எதிர்த்தரப்பினர் குற்றஞ்சாட்டுகிறார்கள். தேர்தலை பிற்போடவேண்டிய தேவை எமக்குக் கிடையாது. நாட்டுக்கு சேவை யாற்றியுள்ளோம். ஆகவே, மக்கள் மத்தியில் எம்மால் தாராளமாகச் செல்லலாம்.

ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தாமரை மொட்டு சின்னத்தை முன்னிலைப்படுத்தி 252 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடுவோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாறுபட்ட சின்னத்தில் போட்டியிடத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயாராகவுள்ளோம்.

பொருளாதார மீட்சிக்காக வரி அதிகரிப்பை தவிர்த்து மாற்று வழிமுறை ஏதும் தற்போது கிடையாது. வரி கொள்கையை மறுசீரமைக்குமாறு எதிர்வரும் வாரம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ள ஆளும் தரப்பினர் கூட்டத்தில் வலியுறுத்தவுள்ளோம்.

பொருளாதார விவகாரங்களில் அரசியல் தலையீடு ஏதும் கிடையாது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அமைச்சரவை அமைச்சுக்களை விஸ்தரிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக எதிர்த்தரப்பினர் குறிப்பிடுகின்றனர். அரசமைப்பின் பிரகாரம், அமைச்சரவை முழுமைபடுத்தப்படவில்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் நான். அமைச்சரவை மறுசீரமைப்பில் எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை நியாயமானதே.

அரசியலில் பல ஆண்டு காலம் எதிர்க்கட்சியிலும் அரசாங்கத்திலும் பதவி வகித்துள்ளோம். ஆகவே, வெற்றி – தோல்வியை மக்கள் தீர்மானிப்பார்கள்.

ஆளும் தரப்பிலும் எதிர்க்கட்சியிலும் இருக்க தயார். பதவி இல்லை என்பதற்காக கட்சிக் கொள்கையை ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம். – என்றார்.

# இலங்கைக்கு ஹெலிகளை வழங்குகின்றது இத்தாலி!

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் மனிதகடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக ஹெலிகளை வழங்குவதன் மூலம் இலங்கைக்கு உதவ இத்தாலிய அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்த விடயத்தை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன், ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போது இத்தாலியத் தூதுவர் ரீட்டா கியுலியானா மன்னெல்லா இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தாலிக்கும், இலங்கைக்கும் இடையிலான பங்காளித்துவத்தை வலுப்படுத்துவது தொடர்பாக இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் கலாசார பரிமாற்றங்கள், சுற்றுலா மேம்பாடு, சாத்தியமான முதலீடுகள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் இந்த சவாலான காலங்களில் இத்தாலி எவ்வாறு இலங்கைக்கு உதவ முடியும் என்பது தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



# போலி லொத்தர் சீட்டுக்கள் இலங்கையில் விற்பனையாம்!

## பொலிஸார் எச்சரிக்கை

இலங்கையில் போலி லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதால் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கமைய, குருநாகல் நகரில் விற்பனை செய்யப்பட்டு வந்த 232 போலி லொத்தர் சீட்டுகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

போலி லொத்தர் சீட்டுகள் விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து குருநாகல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் புதன்கிழமை மாலை திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

அங்கு 232 போலி லொத்தர் சீட்டுகளை வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வாழைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# இந்தியாவுக்கு நன்றி கூறியது இலங்கை

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து கடன் உதவியை பெறுவதற்கு அவசியமான உத்தரவாதத்தை வழங்கியமைக்காக இலங்கை இந்தியாவிற்கு நன்றி தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அவசியமாக தேவைப்படுகின்ற 290 லட்சம் டொலர் கடனுதவியை சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து பெறுவதற்கான உத்தரவாதங்களை இந்தியா வழங்கியமைக்காகவே இலங்கை நன்றி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் அளுநர் இந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தெளிவான உத்தரவாதங்களை இந்தியா வழங்கியுள்ளது என நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியா தேவையான அனைத்து உத்தரவாதங்களையும் வழங்கியுள்ளது இந்தக் கடிதத்தை அனுப்பியமைக்காக நாங்கள் முதலில் இந்திய அதிகாரிகளுக்கு நன்றியைத் தெரிவிக்கவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். கடன்மறுசீரமைப்பு பேச்சுகள் சிறந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளன எனத் தெரிவித்துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் எனினும் சீனா வழங்கிய உத்தரவாதங்கள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்க மறுத்துள்ளார். பாரிஸ் கிளப் மற்றும் சீனா உட்பட ஏனைய கடன்வழங்குநர்கள் உத்தரவாதம் வழங்கும் நிலையில் உள்ளனர் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சீனா அளித்துள்ள உத்தரவாதம் சர்வதேச நாணயநிதியத்தைத் திருப்திப்படுத்த போதுமானதல்ல என காணப்படும் ஊகங்கள் தொடர்பான கேள்விக்கு மத்திய வங்கியின் ஆளுநர் நான் இது குறித்து கருத்து தெரிவிக்க முடியும் என நினைக்கவில்லை எனக்குறிப்பிட்டுள்ளார்.

# மட்டு குசனார்மலைக்கு சுவிஸ் தூதுவர் வருகை







மட்டக்களப்பு – ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கரடியன்குளம் பகுதியில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள குசனார்மலைக்கு சுவிஸ் தூதுவர் விஜயம் செய்துள்ளார்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள சுவிஸ் தூதுவர் டொமிங்க் பேர்கிலர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது மாவட்டத்தில் தொல்லியல் செயலணி ஊடாக தமிழர்களின் பாரம்பரிய இடங்களை தொல்லியல் திணைக்களம் கையகப்படுத்துவதற்கு முன்னெக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் தூதுவரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இதனை தொடர்ந்தே சுவிஸ் தூதுவர் இந்த விஜயத்தை முன்னெடுத்துள்ளார்.

குசனார்மலைக்கு வருகை தந்த தூதுவரை நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கிராம மக்கள் வரவேற்றுள்ளனர். அதனை தொடர்ந்து மலையில் உள்ள முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றதுடன் தூதுவருக்கு ஆசியும் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் குசனார்மலையின் நிலைமைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் அப்பகுதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

# பிள்ளையான், டக்ளஸ் ஆகியோரை வைத்து பேரினவாத தேசியக் கட்சிகள் பாரிய திட்டம்!

## சிறீதரன் சாடல்



பேரினவாத தேசியக் கட்சிகள் தமிழர் மனங்களை எந்த காலத்திலும் வெல்ல முடியாது என்பதால் பிள்ளையான், டக்ளஸ் போன்ற புல்லுருவிகளை வைத்து தமிழர் மனங்களை வெல்ல நினைப்பதாக நாடாளுமன்றஉறுப்பினர்சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி – இராமநாதபுரம் வட்டாரத்தில் நடைபெற்ற உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்–

சிங்கள தேசியக் கட்சியான பொது ஜன பெரமுன கட்சி, வடக்கு கிழக்கில் தேர்தல் கேட்கின்றது.

அதாவது டக்ளஸ் தேவானந்தா ஊடாக வீணை சின்னத்தில் வடமாகாணத்திலும் பிள்ளையானின் கட்சியின் கப்பல் சின்னத்தில் கிழக்கு மாகாணத்திலும் தாங்கள் போட்டியிடுவதாக பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

சிங்கள பேரினவாதிகளின் அடிவருடிகளாக இருக்கும் பிள்ளையானும் டக்ளஸ் தேவானந்தாவும் தங்களது சுய கௌரவத்தை இழந்த நிலையிலும் தங்களைத் திருத்திக் கொள்ள இன்னும் தயாரில்லை. மீளவும் இந்த அரசாங்கத் துக்குகைகழுவுகின்ற அல்லது சேவகம் செய்கின்ற எண்ணங்களில் இருந்து மாற மாட்டார்கள்.

தென்னிலங்கையில் உள்ள தேசிய கட்சிகள் நேரடியாகத் தேர்தலில் போட்டியிட்டு தமிழர்களிடம் வெல்ல முடியாது என்பதை விளங்கிக் கொண்டு இவர்களை இப்போது முகவர்களாக அனுப்பி இருக்கின்றன.

இந்தக் கட்சிக்கு முகவர்களாகச் செயல்படுகின்ற புல்லுருவிகள் தான் இந்தப் பிள்ளையான், டக்லஸ் போன்றவர்கள் இதில் நாங்கள் கவனமாக இருக்க வேண்டும். அத்துடன் டக்ளஸ், பிள்ளையான் தேர்தலில் போட்டியிடுகின்றனர் என்று இருந்து விட முடியாது.

இந்த அரசாங்கத்தில் இருக்கும் பஸில் ராஜபக்ஷ சொல்கின்றார் தங்களுடைய வேட்பாளர்கள் மேற்படி இருவரினதும் கட்சிகள் ஊடாக தேர்தலில் நிற்கின்றனர் என்று.

அதுமட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சி என தெற்கில் உள்ள தேசியக் கட்சிகள் தமிழர் பிரதேசங்களில் போட்டியிடுகின்றன. நாங்கள் தென் பகுதிக்கு சென்று தேர்தல் கேட்கவில்லை.

அவர்கள் தமிழர்களை சிதைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தமிழர்பகுதிகளில் போட்டியிட்டு இவ்வாறு வாக்குகளைச் சிதறடிக்கின்றனர்.

தென்னிலங்கை தேசிய கட்சிகளைப்புறக்கணிக்கவேண்டியதும் சரியானபதிலைகொடுக்கவேண்டியதும் எங்களது கடமையாகும். நாங்கள் ஒற்றுமையாக இருந்து நாங்கள் எங்களது பலத்தை இந்தத் தேர்தல் மூலம் நிரூபிக்கின்ற போதுதான் சிறிது சிறிதாக இருக்கின்ற உதிரிகள் இல்லாமல் போய்விடும்.

எல்லோரும் நினைப்பது போல, தலைவர்களாக வர முடியாது, சரியான தலைவர்களை காலமும் மக்களும் தான் தீர்மானிப்பார்கள், தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் எல்லா கட்சிகளும் ஓரணியில் சேர்ந்தேதான் ஆக வேண்டும்.

அது ஒரு வரலாற்றுக் கடமையாகும், இந்தக் குட்டித் தேர்தலில் நாங்கள் துண்டு துண்டாகி விட்டோம் என்ற கருத்துக்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரம் வட்டாரத்தில் நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பில் தெளிவுபடுத்தும் இந்தக் கலந்துரையாடல் இராமநாதபுரம் வட்டார வேட்பாளர் முத்து சிவமோகன் தலைமையில் நடைபெற்றிருந்தது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கட்சியின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தூய்மையான பசுமை நகர்களை கட்டியெழுப்ப அரசு புதிய திட்டம்

75 ஆவது சுதந்திர தினத்துக்கு இணைவாக தூய்மையான பசுமை நகரங்களைக் கட்டியெழுப்பும் வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

பசுமையான இலங்கையை உருவாக்கும் பொறுப்பை இளைஞர்களிடம் கையளிப்பதன் மூலம் 75 ஆவது சுதந்திர தினத்துக்கு இணைவாக தூய்மையான பசுமை நகரங் களைக் கட்டியெழுப்பும் வேலை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக் கருவின் படி முன்னெடுக்கப்படும் தேசிய இளைஞர் தளம் வேலைத்திட்டத்தின் கீழ், இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் இளைஞர் நாடாளு மன்றம் என்பன ஒன்றிணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

முதற்தடவையாக இலங்கையின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத் தும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட நகரமொன்று இந்த வேலைத்திட்டத்தின் ஆரம்ப கட்டமாக தூய்மைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய பெப்ரவரி 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தும் வகையில் 335 பிரதேசசெயலாளர்பிரிவுகளிலும் 50 ஆயிரம் இளைஞர், யுவதிகளின் பங்களிப்புடன் தெரிவு செய்யப்பட்ட நகரத்தை தூய்மைப் படுத்தும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

75 ஆவது சுதந்திர தினத்துடன் இணைந்ததாக ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக ஆரம்பிக்கப் படவுள்ள 335 நகரங்களில் ஆரம்பிக்கப்பட உள்ள இந்தத் திட்டத்துக்கு, அந்தப் பிரதேசங்களில் உள்ள பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை மற்றும் அதனு டன் இணைந்த ஏனைய நிறுவனங்களின் பங்களிப்பு பெற்றுக்கொள்ளப் படவுள்ளது.

பிரதேச செயலாளர் அலுவலகம், இலங்கை பொலிஸ் திணைக்களம், சுகாதார சேவைகள் அலுவலகம் மற்றும் ஏனைய சமூகத்தை அடிப் படையாகக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு அமைப்புகள் ஆகியவற்றின் ஒத்துழைப் புகளையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்க் ப்பட்டுள் ளது.

இதற்கமைய அடையாளம் காணப்பட்ட நகரம், வருடம் முழுவதும் மாதந்தோறும் தெரிவுசெய்யப்பட்ட தினத்தன்று சுத்திகரிக்கப்பட வேண்டும்.

இதற்காக அத்தொகுதிக்குள் உள்ளடங்கும் ஏனைய இளைஞர் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், பயிற்சி நிலையத்திலுள்ள இளைஞர்கள், சாரணர்கள், மாணவர் படையணி மற்றும் பாடசாலை சூழல் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் பங்களிப்பையும் மறைமுகமாகப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.



# மறைந்த முன்னாள் தமிழ் அதிகாரிக்கு ராணுவ மரியாதையுடன் இறுதி சடங்கு

யாழ்– கீரிமலை பகுதியில் உயிரிழந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான சுந்தரம் அருளம்பலம் 21 வேட்டுக்கள் முழங்க மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த 1958 ஆம் ஆண்டு இராணுவத்தில் கடமையில் இணைந்து, 1980ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அவரது இறுதிச் சடங்குகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, கீரிமலை இந்து மயானத்தில் 21 துப்பாக்கி வேட்டுக்கள் முழங்க இராணுவ மரியாதையுடன் அவரது உடல் தீயில் சங்கமமானது.

இந்த இறுதி நிகழ்வில் யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேயர் ஜெனரல் போத்தொட்ட, இராணுவ படைப்பிரிவு அதிகாரிகள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

### ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பை

# ஜெர்மனி நெதர்லாந்து அரையிறுதிக்கு நகர்வு

எஃப்ஐஎச் உலகக் கோப்பை ஆடவர் ஹாக்கிப் போட்டியின் அரையிறுதிச் சுற்றுக்கு ஜெர்மனி, நெதர்லாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.

பெனால்டி ஷூட் அவுட்டில் இங்கிலாந்தை வெளியேற்றியது ஜெர்மனி. மற்றொரு ஆட்டத்தில் தென்கொரியாவை வீழ்த்தியது நெதர்லாந்து.

இந்தியாவின் புவனேசுவரத்தில் புதன்கிழமை நடைபெற்ற முதல் காலிறுதி ஆட்டத்தில் ஜெர்மனியும்-இங்கிலாந்தும் மோதின.

குரூப் பி பிரிவில் இரண்டாம் இடம்பெற்ற ஜெர்மனி கிராஸ் ஓவா ஆட்டத்தில் பிரான்ஸை 5-1 என வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

ஆட்டம் தொடங்கியதுமே இங்கிலாந்து வீரர்கள் ஆதிக்கம் செலுத்தியதால், 12-ஆவது நிமிடத்தில் ஸ்ச்சாரி வாலேஸ், 33ஆவது நிமித்தில் லியாம் அன்செல் ஆகியோர் கோலடித்தனர். இதனால் 2-0 என இங்கிலாந்து முன்னிலை பெற்றிருந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

இரண்டாவது பாதியில் ஜெர்மனியின் சகோதரர்களான மேட்ஸ் 58ஆவது நிமிடத்திலும், டாம் கிராம்பஸ்ச் 59ஆவது நிமிடத்திலும் பதில் கோலடித்தனர். கிறிஸ்டோபர் ரூ பெனால்டி ஸ்ட்ரோக்கை வீணடித்தார்.

2-2 என சமநிலை ஏற்பட்டதால், பெனால்டி ஷூட் அவுட் கடைபிடிக்கப்பட்டது. ஜெர்மனி தரப்பில் நிக்கிலாஸ் வெல்லேன், ஹேன்ஸ் முல்லர், பிரின்ஸ் தீஸ், கிறிஸ்டோபர் ரூ ஆகியோர் கோலடித்தனர். இங்கிலாந்து தரப்பில் ஜேம்ஸ் அல்பெரி, ஸச்சாரி வாலேஸ், பில் ரோபர் கோலடித்தனர். நிலையில் 4-3 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு ஆட்டத்தில் பலம் வாய்ந்த நெதர்லாந்து அணி- தென் கொரியாவை 5-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அபார வெற்றியுடன் அரையிறுதிக்கு தகுதி பெற்றது. நெதர்லாந்து தரப்பில் கோன் பிஜேன் 27, 31, ஜஸ்டன் பிளாக் 36, ஸ்ட்ஜீன் வென் 50, டீன் பியுன்ஸ் 58ஆவது நிமிடங்களில் கோலடித்தனர். தென்கொரியா தரப்பில் இன்வு சியோ 51ஆவது நிமிடத்தில் ஒரே ஒரு கோலடித்தார்.

ஜெர்மனி -ஆஸ்திரேலியாவையும், நெதர்லாந்து- நடப்பு சாம்பியன் பெல்ஜியத்தையும் அரையிறுதியில் எதிர்கொள்கின்றன.

## மகளிர் ஐ.பி.எல். அணிகள் உச்ச விலைக்கு விற்பனை

இந்திய மகளிர் பிரிமியர் லீக் போட்டியில் பங்கேற்கும் 5 அணிகள் நேற்று ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. ஏற்கனவே ஆடவர் ஐபிஎல் பிரபலமான நிலையில் இந்திய கிரிக்கெட் சபை மகளிர் ஐபிஎல் போட்டிகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளது. இதற்கான அணி விற்பனை ஆடவர் அணிகளின் தொடக்க விற்பனையைவிட எதிர்பாராத தொகைக்குச் சென்றுள்ளது.

இந்த ஏலத்தின் மூலம் இந்திய கிரிக்கெட் சபைக்கு சுமார் 18 கோடி ரூபாய் வருவாய் கிட்டியுள்ளது என்று அதன் செயலாளர் ஜெய் ஷா கூறியுள்ளார்.

2008-இல் ஆடவர் ஐபிஎல் தொடர் தொடங்கப்பட்டபோது கிடைத்த தொகையைவிட இது அதிகம் ஆகும்.

அகமதாபாத் அணியை அதானி ஸ்போர்ட்ஸ்லைன் நிறுவனம் ரூ. 4,500 கோடிக்கு வாங்கியுள்ளது. மும்பை அணியை ரூ. 3800 கோடிக்கு இந்தியன் ஸ்போர்ட் வாங்கியுள்ளது. பெங்களூரு அணியை ரூ. 3700 கோடிக்கு ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரும், டில்லி அணியை ரூ. 3200 கோடிக்கு ஜேஎஸ்டபிள்யு, ஜிஎம்ஆர் பிரைவேட் லிட் நிறுவனமும், லக்னௌ அணியை ரூ.3000 கோடிக்கு கேப்ரி குளோபல் ஹோல்ட்ங் நிறுவனமும் வாங்கியுள்ளன.

ஏற்கெனவே மகளிர் ப்ரீமியர் லீக் ஊடக உரிமையை 2027ஆம் ஆண்டு வரை ரூ.3700 கோடிக்கு வயாகாம் 18 வாங்கியுள்ளது.

இந்நிலையில் ஆமதாபாத் நகரை முன்னிலைப்படுத்தும் தனது அணி குஜராத் ஜெயண்ட்ஸ் (Gujarat Giants) என அழைக்கப்படவுள்ளதாக அதானி ஸ்போர்ட்ஸ்லைன் நிறுவனம் அறிவித்துள்ளது.

### ஆஸி. ஓபன் டென்னிஸ் போட்டி:

# ஜெகோவிச், டாமி, சபலென்கா, மகதா அரையிறுதி அட்டத்துக்குள் நுழைவு

ஆஸி. ஓபன் ஒற்றையர் பிரிவில் அரையிறுதிக்கு ஆடவர் பிரிவில் ஜோகோவிச், டாமி பால், மகளிர் பிரிவில் சபலென்கா, மகதா லினேட் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் புதன்கிழமை நடைபெற்றன. அமெரிக்கா வீரர்கள் டாமி பால்-பென் ஷெல்டன் முதல் காலிறுதியில் ஆடினார். 25 வயதான டாமி பால் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடினார். முதல் இரண்டு செட்களை 7-6, 6-3 என கைப்பற்றிய டாமி, மூன்றாவது செட்டை 5-7 என இழந்தார். எனினும் நான்காவது செட்டில் சுதாகரித்து ஆடிய டாமி பால் 6-4 என அதை கைப்பற்றி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் சொபியாவின் முதல் நிலை வீரர் நோவக் ஜோகோவிச் 6-1, 6-2, 6-4 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் ஆன்ட்ரே ருப்லேவை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

தனது 22ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை நெருங்கி உள்ளார் ஜோகோவிச். அரையிறுதியில் அமெரிக்க வீரர் டாமி பாலை எதிர்கொள்கிறார்.


**மகளிர் பிரிவு முடிவுகள்**

மகளிர் பிரிவில் போலந்தின் மகதா லினேட் 6-3, 7-5 என்ற நேர் செட்களில் முன்னாள் உலக முதல்நிலை வீராங்கனை கரோலினா பிளிஸ்கோவாவை வீழ்த்தினார்.

மற்றொரு போலந்து வீராங்கனையான ஸ்வியாடெக் உலகின் முதல்நிலை வீராங்கனை ஆவார். இதில் சாம்பியன் பட்டம் வெல்வார் எனக் கருதப்பட்ட நிலையில், அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார். மகதா லினேட் குறித்து எவரும் சிந்திக்கவில்லை. ஆனால் தனது துடிப்பான ஆட்டத்தின் மூலம் முதன்முதலாக கிராண்ட்ஸ்லாம் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார் லினேட்.

மற்றொரு காலிறுதியில் 5ஆம் நிலை வீராங்கனை அர்யனா சபலென்கா 6-3, 6-2 என டோனா வெகிக்கை எளிதில் வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

## சானியா – போபண்ணா இணை கலப்பு இறுதிப் போட்டிக்கு தகுதி



இந்தியாவின் சானியா மிர்சா-ரோஹன் போபண்ணா ஜோடி ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளது. ஜனவரி 28 அன்று இறுதியாட்டம் நடைபெறவுள்ளது.

தனது கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியில் விளையாடி வருகிறார் பிரபல வீராங்கனை சானியா மிர்சா. மகளிர் இரட்டையர் பிரிவில் 2ஆவது சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறியபோதும் கலப்பு இரண்டையர் பிரிவில் இறுதிவரை முன்னேறியுள்ளார்.

அரையிறுதிச் சுற்றில் அமெரிக்க, இங்கிலாந்து இணையான டிசிரே - ஸ்குப்ஸ்கியை 7-6(5), 6-7(5), 10-6 எனக் கடுமையான போராட்டத்துக்குப் பிறகு வீழ்த்தியது இந்திய இணை.

பெப்ரவரி மாதத்துடன் டென்னிஸ் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக சானியா மிர்சா சமீபத்தில் அறிவித்தார். ஆறு கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றவர் 35 வயது சானியா மிர்சா. இரட்டையர் பிரிவில் உலகளவில் முதல்நிலை வீராங்கனையாகவும் இருந்துள்ளார். பெப்ரவரி 19 முதல் நடைபெறவுள்ள துபாய் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் விளையாடிவிட்டு டென்னிஸிலிருந்து ஓய்வு பெறுவதாக சானியா மிர்சா அறிவித்துள்ளார்.

இந்நிலையில் சானியா மிர்சா-ரோஹன் போபண்ணா இணை இறுதிச்சுற்றில் பிரேசிலைச் சேர்ந்த ஸ்டெஃபானி - ரஃபேல் மாடோஸ் ஜோடியுடன் மோதுகிறது.

# ஐசிசியின் முதல்நிலை பந்துவீச்சாளர் சிராஜ்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) வெளியிட்ட தரவரிசைப் பட்டியலின்படி ஒருநாள் ஆட்டங்களில் உலகின் முதல்நிலைப் பந்து வீச்சாளராக இந்திய வீரர் முகமது சிராஜ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நியூஸிலாந்தின் டிரென்ட் பௌல்ட், ஆஸி.யின் ஜோஷ் ஹேஸல்வுட் ஆகியோரை பின்னுக்கு தள்ளி முதன்முறையாக இந்த நிலையை பெற்றுள்ளார் சிராஜ்.

கடந்த 12 மாதங்களாக முகமது சிராஜ் அற்புதமான திறனுடன் ஆடி வருகிறார். இலங்கை மற்றும் நியூஸிலாந்துடன் நடைபெற்ற ஒருநாள் தொடர்களில் சிராஜ் அபாரமாக பந்துவீசி வெற்றிக்கு வழிவகுத்தார்.

இலங்கையுடன் நடந்த ஒருநாள் தொடரில் 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார். நியூஸிலாந்துடன் நடந்த ஆட்டம் ஒன்றில் 4 விக்கெட்டுகளை சாய்த்தார். சிராஜ் இரு தொடர்களிலும் அற்புதமாக ஆடினார். அணி நிர்வாகம் என்ன தேவை என கருதுகிறதோ அதை செயல்படுத்தினார். புது பந்தை எடுத்து ஸ்விங் செய்து விக்கெட்டுகளை வீழ்த்துவதுடன் மிடில் ஓவர்களிலும் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துகிறார் என்றார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐசிசி) துடுப்பாட்ட தரவரிசையில் பாகிஸ்தான் கேப்டன் பாபர் ஆஸம் முதலிடத்தில் உள்ளார். ஷுப்மன் கில் 20ஆவது இடத்தில் இருந்து 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

# அமைதியற்ற சூழலில் தேர்தல் இடம்பெற்றால் திரிவுபடுத்தப்பட்ட பெறுபேறே கிடைக்குமாம்!

## சமன் ரத்னப்பிரிய ஆரூடம்



தேர்தல் நடத்தக்கூடிய சூழல் நாட்டில் இல்லாத நிலையில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் பெறுபேற்றை எதிர்பார்க்க முடியாது. அதனால் உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெற்றால் திரிவுபடுத்தப்பட்ட பெறுபேறே கிடைக்கும். இதனை ஜனநாயக ரீதியில் இடம்பெற்ற தேர்தல் எனக் கருத முடியாது என ஐக்கிய தேசிய கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பாளர் நாயகமுமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தேர்தல் தொடர்பாக மக்கள் மத்தியில் பெரிதளவில் ஆர்வம் இல்லை. என்றாலும் ஒரு சில கட்சிகளே பொய்யான ஆர்வத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றன. நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அதனை ஆளும் கட்சிக்கு எதிராக பிரசாரம் செய்து, மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளவே இவர்கள் முயற்சிக்கின்றனர். பொருளாதார ரீதியில் மக்கள் விரக்தியடைந்துள்ளதால், மக்களும் தங்களது கோபத்தை வெளிப்படுத்துவதற்காக தங்களது வாக்கைப் பயன்படுத்துவார்கள். இதனால் திரிவுபடுத்தப்பட்ட பெறுபேறே கிடைக்கும். இவ்வாறான தேர்தல் ஜனநாயக தேர்தல் முடிவாகக் கருதமுடியாது.

அத்துடன் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை இருக்கும்போது மக்களுக்கு நிதானமாக சிந்தித்து தீர்மானம் எடுக்கும் சூழல் இல்லை. அதேபோன்று சுதந்திரமான நியாயமான தேர்தலை நடத்துவதற்கான சூழலும் தற்போது நாட்டில் இல்லை. அதனால்தான் தற்போது தேர்தல் தேவையில்லை என்று நாங்கள் தெரிவிக்கின்றோம். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதும் நாட்டில் பதற்றமானதொரு சூழல் இருந்த காலகட்டத்திலாகும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலைத் தொடர்ந்து, சிங்கள மக்களுக்கு பாதுகாப்பான தலைவர் என கோட்டாபய ராஜபக்ஷவை பிரசாரம் செய்ததன் பெறுபேறாகவே சிங்கள மக்கள், எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அவருக்கு வாக்களித்தனர். இறுதியில் நாடு வங்குரோத்து அடைந்தது.

அதனால் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திரமடைந்து, மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழல் நாட்டில் ஏற்படும்போது தேர்தலுக்கு சென்றால், மக்கள் நிதானமாக சிந்தித்து தங்களது வாக்குகளை அளிக்கும் சூழல் ஏற்படும். அத்துடன் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் யார் வெற்றிபெற்றாலும் ஆட்சி மாற்றம் ஏற்படப்போவதில்லை. மாறாக வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தை ஓரளவு கட்டியெழுப்பி, நாட்டுக்கு கிடைக்கும் வருமானம் அதிகரித்தும் இந்த சந்தர்ப்பத்தில் தேர்தலை நடத்துவதால் 1000 கோடி ரூபா செலவிடவேண்டி ஏற்படுகிறது. அதேபோன்று தேர்தலுக்குப் பின்னர இதனை நடத்துவதற்கு கோடிக்கணக்கான ரூபா செலவிடவேண்டி ஏற்படுகிறது.

நாட்டில் அத்தியாவசிய மருந்துப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றபோதும் ஏனைய மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு இருந்து வருகின்றது. மருந்து விநியோகிக்கும் நிறுவனத்துக்கு 5 கோடி ரூபா செலுத்த வேண்டி இருக்கின்றது. அதனால்தான் இந்த தட்டுப்பாட்டுக்கு காரணமாகும். அதனால் தற்போது தேர்தல் நடத்தாவிட்டால் அந்த பணத்தை இவ்வாறான அத்தியாவசிய பொருள்களை கொண்டுவர செலவிட முடியும். – என்றார்.

# ‘மொட்டு’ தோற்ற வரலாறு இல்லை; இம்முறையும் வெற்றிவாகை சூடும்

## ராஜபக்சக்களின் சகா நம்பிக்கை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தோற்ற வரலாறு இல்லை. 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சிசபைத்தேர்தலில்பெற்றுக்கொண்ட வெற்றியை இம்முறை தேர்தலிலும் பெற்றுக்கொள்வோம்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற முறையில் 250 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பாக ‘மொட்டு’ச் சின்னத்தில் போட்டியிடுவதற்காக வேட்பாளர் பட்டியல்களைத் தாக்கல் செய்துள்ளோம்.

நாங்கள் தாக்கல் செய்த எந்த வேட்புமனுக்களும் நிராகரிக்கப்படவில்லை.

கட்சி என்ற முறையில் எமது பொறுப்புகளை சிறந்த முறையில் நிறைவேற்றியுள்ளோம்.

அதேபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எமது கட்சியுடன் கூட்டணி அமைத்துக்கொண்டுள்ள கட்சிகள் கூட்டணி என்ற முறையில் வேறு சின்னத்தில் போட்டியிடுகின்றன.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற முறையில் வெற்றி பெறுவதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

இது உண்மையில் தொகுதிகளுக்கான தேர்தலாகக் காணப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டு நாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வரலாற்று ரீதியிலான வெற்றியைப் பெற்றோம்.

அந்த வெற்றியைப் போன்றே இம்முறை தேர்தலிலும் வெற்றி பெறுவோம் என்று எதிர்பார்க்கின்றோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தோற்ற வரலாறு இல்லை. அரசு என்ற முறையில் பல்வேறு குற்றச் சாட்டுக்களை எம் மீது முன்வைக்கின்றனர். தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு முயற் சிப்பதாகக் கூறுகின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற முறையில் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

எமது கட்சியே முதலாவதாக வேட்பாளர் பட்டியலைத் தாக்கல் செய்தது. கட்டுப்பணத்தையும் முதலாவதாக எமது கட்சியே கட்டியது. எனவே, தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் பின்வாங்கவில்லை – என்றார்.

# நாட்டின் மருந்துகள் உற்பத்தியை 50 சதவீதமாக அதிகரிக்க முடிவு!

## சுகாதார அமைச்சர் ஹெகலிய ஆலோசனை

இலங்கையின் மருந்து உற்பத்தியை எதிர்வரும் சில வருடங்களில் 50 சதவீதமாக அதிகரிப்பதை இலக்காகக் கொண்டுள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல, ஜேர்மன் தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

தற்போது மருந்து உற்பத்தி 15 – 20 சதவீதம் என்ற நிலையில் உள்ளது. நாட்டுக்குத் தேவையான மருந்து உற்பத்திக்கான மூலப்பொருள்களை வழங்குவதில் கவனம் செலுத்தி இந்த நாட்டில் மருந்து உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கைக்கான ஜேர்மன் தூதுவருடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தேவையான மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள், தொழிலதிபர்கள் போன்றோருக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் எனவும், அத்தகைய திட்டத்துக்கான ஒப்பந்தங்கள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளன எனவும், அதனைத்தொடர்ந்து அவர்களது பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

உபகரணங்களை இறக்குமதி செய்வதில் வரிச் சலுகையில் இருந்து விலக்கு அளிப்பது உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படும் என்றும் புதிய திட்டத்துக்காக 12 முதலீட்டாளர்கள் தொழிற்சாலைகளுக்காக முதலீடு செய்துள்ளனர் எனவும் அமைச்சர் தெரிவித்தார். எதிர்காலத்தில் பல மருந் துகளும் உபகரணங்களும் உற்பத்தி செய்யப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பறவைகள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் தலைமன்னார் பிரதான வீதியில் இந்தச் சரணாலயம் அமைந்துள்ளது.

கொழும்பு பல்கலைகழகம் மற்றும் பெண்கள் மேம்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வேல்ட் ஓரியன் கிளப் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் இந்தச் சரணாலயம் அமைக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பறவைகள் மற்றும் ஈரநிலம் தொடர்பாக பணியாற்றும் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் இதற்குப் பெறப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் நகர் பிரதேச செயலாளர் ம.பிரதீப், பேராதனை பல்கலைகழக தாவர அறிவியல் பேரசிரியர் நிமல் குணதிலக, மழைக்காடுகள் தொடர்பான பேராசிரியர் சவத்திரி குணதிலக, பறவைகள் ஆய்வு பேராசிரியர் சம்பத் செனவிரெட்ன மற்றும் கயோமினி, பெண்கள் மேம்பாட்டு பேரவை மாவட்ட இணைப்பாளர் ரெபேக்க மெராண்ட, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட அமைப்பின் பிரதிநிதிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், கடற்படை உயர் அதிகாரிகள், விவசாயத் திணைக்கள அலுவலர்கள் உட்படப் பலரும் இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொண்டனர்.

ஈரநிலங்களின் முக்கியத்துவம் மற்றும் மன்னார் நோக்கி இடம்பெயரும் வெளிநாட்டு பறவைகள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் நிகழ்வில் தெளிவுபடுத்தப்பட்டது

மன்னார் மாவட்டத்தை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள பறவைகள் கழகத்தின் தொடக்க நிகழ்வும் இன்று இடம்பெற்றது. கழகத்துக்கு தேவையான தொலைநோக்கி உள்ளடங்களான தொழில்நுட்ப கருவிகளும், புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## தெற்கில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலியில் நேற்றிரவு இரண்டு ஹயஸ் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது ஹயஸ் வாகனம் ஒன்றின் சாரதியான 35 வயதுடைய குடும்பஸ்தரும், அதில் பயணித்த சாரதியின் சகோதரனான 27 வயதுடைய இளைஞரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மற்றைய ஹயஸ் வாகனத்தின் சாரதியும், அதில் பயணித்த 9 வயது சிறுமி உள்ளிட்ட மூன்று பெண்களும் படு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாத்தறையில் நேற்று மாலை ஓட்டோவும் பட்டா வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது ஓட்டோவின் சாரதியான 22 வயது இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பட்டா வாகனத்தின் சாரதியும், அதில் பயணித்த 7 வயது சிறுவனும் (சாரதியின் மகன்) படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறையில் இன்று அதிகாலை காரும் தனியார் பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதன்போது காரின் சாரதியான 67 வயதுடைய ஏழு பிள்ளைகளின் தந்தை படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். காரில் பயணித்த சாரதியின் மனைவி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். தனியார் பஸ்ஸில் சென்றவர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. தனியார் பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2023 இல் வெளியிடப்பெற்றது.